மருதானையில்
இல்லங்களுக்கும்
அலுவலகங்களுக்கும்
தேவையான
★ ரெக்ஸின் துணிகள்
★ போமிக்கா ஷீட்ஸ்
★ லினோலியன் காபெட்ஸ்
முதலானவற்றுக்கு
பெட்டா ட்ரேடிங்கம்பனி
382, மருதானை வீதி, கொழும்பு-10.
தொலை பேசி: 598161, 33779.



# தினபதி

ரூ 2/=

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல. 4582 1984 ஜூன் 14 வியாழக்கிழமை ★ ★ ★ தினபதி




இல்லங்கள்
மற்றும்
காரியாலயங்களுக்குத்
தேவையான
★ லினோலியன் காபெட்ஸ்
★ போமிக்கா ஷீட்ஸ்
★ உயர்ந்தரக ரெக்ஸின்
★ ஹாட்போட்ஸ்
முதலானவற்றை பற்பல
டிசைன்களில் பெற்றுக்கொள்ள
PETTAH TRADING COMPANY
382, Maradana Road, Colombo-10
PHONE: 598161-33779


★ அமெரிக்காதான் இன்று உலகின் மிகச் சக்தி வாய்ந்த நாடு

★ அமெரிக்க ஜனதிபதியின் அழைப்பு முக்கியமானதும் கௌரவம் அளிப்பதும் ஆகும்

# இலங்கையை அமெரிக்க அரசு பாதுகாத்தே ஆகவேண்டும்



ஜே. ஆர். ஜெயவர்த்தன

## இராணுவ ஒப்பந்தம் எதுவும் எந்தநாட்டுடனும் செய்யமாட்டேன்

### ஜனதிபதி ஜெயவர்த்தன கருத்து

— இக்பால் அத்தாஸ் —

கொழும்பு, ஜூன் 14

அமெரிக்காவுடனே அல்லது வேறு எந்த நாட்டுடனுமோ இராணுவ ஒப்பந்தம் எதையும் செய்ய மாட்டேன். இலங்கையை அமெரிக்க அரசு பாதுகாத்தே ஆகவேண்டும், மற்றும் சிறிய நாடுகளேயும் பாதுகாக்க அமெரிக்கா கடமைப்பட்டு இருக்கிறது, இப்படி ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தினபதிக் குத் தெரிவித்தார்.

அமெரிக்காதான் இன்று உலகின் மிகச் சக்தி வாய்ந்த நாடு என்றும்,

## றேகனுக்கு ஜே. ஆர். "அதிர்ஷ்டப் பரிசு"

வாஷிங்டன், ஜூன் 13

அமெரிக்க ஜனதிபதி திரு. ரெனல்ட் றேகனுக்கு இலங்கை ஜனதிபதி "அதிர்ஷ்டப் பரிசு" வழங்குவார் என அமெரிக்கப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

"ஜயத்து" என்னும் பெயருடைய யானைக் குட்டி ஒன்றை இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, திரு. றேகனுக்கு வழங்கவிருப்பதையே அந்தப் பத்திரிகை அவ்வாறு குறிப்பிட்டிருந்தது.

"நாம் வெற்றி அடைவோம்" என்பதையே "ஜயத்து" என்னும் சிங்களச் சொல் குறிக்கிறது.

யானைச் சின்னத்துடனேயே இலங்கை ஜனதிபதி, தேர்தலில் வெற்றி பெற்றார். திரு. றேகனின் தேர்தல் சின்னமும் யானைதான் என்று அந்தச் செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

திரு. றேகனுக்கு பரிசாக வழங்கப்படும் "ஜயத்து" யானைக்

(2ஆம் பக்கம் பார்க்க)

## பொசன் போயா கொண்டாட்டம்

கொழும்பு, ஜூன் 14

பொசன் போயா தினம் நேற்று நாடு முழுவதும் அநுஷ்டிக்கப்பட்டது.

வரலாற்றுப் பிரசித்த மிக்க பௌத்த வழிபாட்டுத் தலங்களில் திரண்ட பௌத்தர்கள் சில் அநுஷ்டானம் உட்பட

(2ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இந்து விடுதி திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ். மாநகரசபையால் நல்லூரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள "இந்து விடுதி" இன்று வியாழக்கிழமை நண்பகல் திறந்துவைக்கப்படும்.

யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் இதனைத் திறந்து வைப்பார். (ஊ-க-120)

## மின்சாரக் கட்டண மீளாய்வு கமிட்டி

கொழும்பு, ஜூன் 14

தற்போது நடைமுறையில் இருந்துவரும் மின்சாரக் கட்டண முறையை மாற்றிய மைப்பது

(2ஆம் பக்கம் பார்க்க)

லிபிய காரிமார்

## லிபிய காரிமார் கிழக்கு விஜயம்

கொழும்பு, ஜூன் 14

ரமழான் நோன்பு மாதத்தை யொட்டி இலங்கைக்கு விஜயம் செய்துள்ள லிபியக் "காரி" மார்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கிழக்கிலங்கைக்கு விஜயம் செய்வார்கள்.

எதிர்வரும் 22 ஆம் திகதி வரை அவர்கள் அம்பாறை மாவட்டத்தில் விஜயம் மேற்

(2ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்காதான் இன்று உலகின் மிகச் சக்தி வாய்ந்த நாடு என்றும், அமெரிக்க ஜனாதிபதியின் அழைப்பு முக்கியமானதும், கௌரவம் அளிப்பதும் என்றும் ஜனாதிபதி மேலும் சொன்னார்.

அமெரிக்க ஜனாதிபதி றேகனின் அழைப்பை ஏற்று அமெரிக்காவுக்கு விஜயம் செய்வது பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் கேட்ட போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதியிடம் கேட்கப்பட்ட மற்றும் சில கேள்விகளும், அவர் அளித்த விடைகளும் வருமாறு:—

கேள்வி: அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் அங்கு கடைசியாக விஜயம் செய்யும் ஒரு நாட்டின் தலைவர் தாங்கள் தான். இந்த விஜயத்தில் என்ன முக்கியத்துவம் காண்கிறீர்கள்?

பதில்: முக்கியத்துவமா? உலகில் அதிசக்தி வாய்ந்த நாடு அமெரிக்கா. அந்த நாட்டுத் தலைவரின் அழைப்பு முக்கியமானதும், கௌரவம் அளிப்பதுமாகும்.

கே: அரசியல் எதிரிகள் உங்களை "யங்கி டிக்" எனக் கூறுகின்றனர். ஜனாதிபதி றேகனுடன் ஒரு இராணுவ ஒப்பந்தம்

(2ஆம் பக்கம் பார்க்க)

## நோன்பு தொழுகை நேரம்

14 — 6 — 84

| | | |
|---|---|---|
| ஸஹர் முடிவு | — | காலை 4.19 |
| ஸுபஹு | — | காலை 4.34 |
| சூரிய உதயம் | — | காலை 5.54 |
| ளுஹர் | — | பகல் 12.20 |
| அஸர் | — | பிற்பகல் 3.37 |
| மஃரிபு | — | மாலை 6.26 |
| இஷா | — | இரவு 7.46 |

## தொலைபேசி பகுதி குறைபாடுகளை நீக்க நான்கு அமைச்சர்கள் குழு

கொழும்பு, ஜூன் 14

தொலைத் தொடர்புத் திணைக்களத்தில் நிலவும் குறைபாடுகளை நீக்குவதற்கு நான்கு அமைச்சர்கள் அடங்கிய அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்படும்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் சிபார்சை அடுத்து அமைச்சரவை இதற்கான அங்கிகாரத்தை வழங்கியதாக, அமைச்சரவைப் பேச்சாளரான ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் தெரிவித்தார்.

பொதுநிர்வாக, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மேஜர் மொண்

(2ஆம் பக்கம் பார்க்க)

## இன்றிரவு ஜனாதிபதி அமெரிக்கா பயணம்

கொழும்பு, ஜூன் 14

அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டு, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் பாரியாரும் இன்றிரவு விமான மூலம் பயணமாவார்கள்.

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து, இன்றிரவு 11.30 மணிக்கு, ஏயர் லங்கா விமானத்தில் அவர்கள் செல்வார்கள்.

உத்தியோகபூர்வ வழியனுப்பு வைபவங்கள் எதுவும் விமான நிலையத்தில் இடம்

(2ஆம் பக்கம் பார்க்க)

## 16 பயங்கரவாத வழக்குகள் நாளை விசாரணைக்கு

கொழும்பு, ஜூன் 14

பயங்கரவாத தடுப்பு (தற்காலிக விதிகள்) சட்டத்தின் கீழ், 16 வழக்குகள் நாளை வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மூன்று மேல் நீதிமன்றங்களில் இவை விசாரிக்கப்படும்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் திரு. டி. ஜி. ஜயலத், திரு. கே. விக்னராஜா, திரு. லக்ஷ்மன் வீரசேகரா ஆகியோர் முன்னிலையில், இந்த வழக்குகள் விசாரணைக்குவரும் எனத் தெரிகிறது.

வண. பிதா சிங்கராயர், திருமதி நிர்மலா நித்தியானந்தன் ஆகியோருக்கு எதிரான வழக்குகளும் நாளை எடுத்துக் கொள்ளப்படும்.

திருமதி நிர்மலா நித்தியானந்தன் சிறையிலிருந்து தப்பிச் சென்று விட்டபடியால் அவர் இல்லாமலேயே வழக்கு விசாரிக்கப்படலாம் என நம்

(2ஆம் பக்கம் பார்க்க)

## புனைபெயர் சட்டத்தை அரசாங்கம் கைவிடாது

கொழும்பு, ஜூன் 14

பத்திரிகைகளில் புனை பெயரில் எழுதக் கூடாது. சொந்தப் பெயருடனேயே எதையும் பிரசுரிக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வரும் திட்டத்தை மீளாய்வு செய்யும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை.

யும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை.

ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் நிருபர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு தெரி

(2ஆம் பக்கம் பார்க்க)

### தோட்டப் பாடசாலை ஆசிரியர் தெரிவு:

## கடிதம் கிடைக்காதவர்களும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம்

### கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூன் 14

தோட்டப் பாடசாலை ஆசிரியர்களை தெரிவுசெய்வதற்கு நடத்தப்படும் நேர்முகபரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் கிடைக்காதவர்களும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வசதி செய்யப்பட்டு இருக்கிறது.

கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

தோட்டப் பாடசாலை ஆசிரியர் நியமனத்துக்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் ஐயாயிரம் பேர் தேறினர். அவர்

(2ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நிலையங்களும் நடக்கும் நாட்களும்

கொழும்பு, ஜூன் 14

தோட்டப் பாடசாலைகளுக்கு தமிழ் மொழி மூலமான ஆயிரம் தமிழ் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நுவரெலியா, பண்டாரவளை, கண்டி, கேகாலை, மாத்தளை ஆகிய ஐந்து பிராந்திய கல்விப் பணிமனைகளில் எதிர்வரும் 16ஆம், 17ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்த நேர்முகப் பரீட்சை

(2ஆம் பக்கம் பார்க்க)

### சோமண்ணை



ஜனாதிபதித் தேர்தலிலும் சர்வ ஜன வாக்கெடுப்பிலும் வெற்றி பெற்ற இரட்டை அதிர்ஷ்டக்காரர் ஜனாதிபதி ஜெயவர்த்தன. அவர் அளிக்கும் பரிசு ஜனாதிபதி றேகனுக்கு அதிர்ஷ்டத்தைக்!! கொடுக்கத்தானே செய்யும்.

## சீக்கிய இராணுவ வீரர்கள் கிளர்ச்சி நிரூபணமானல் தூக்குத் தண்டனை

பம்பாய், ஜூன் 13

கிளர்ச்சி நடத்தியதாகக் கூறப்படும் சீக்கிய அதிருப்தி இராணுவ வீரர்கள் குற்றவாளிகளாகக் காணப்படும் பட்சத்தில் தூக்கில் இடப்படுவார்கள்.

இப்படி தென் மாநில கட்டளைப் பணியக இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் ரி. எஸ். ஒபரோய் நேற்றிரவு தெரிவித்தார்.

அவர் பம்பாயில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அப்போதே மேற்கண்டவாறு சொன்னார்.

லெப்டினன்ட் ஜெனரல் ஒபரோய் இதுபற்றி மேலும் கூறியதாவது:—

சீக்கியரின் பொற் கோயிலை இராணுவம் முற்றுகையிட்டதை அடுத்து இராணுவ முகாம்களை விட்டு பஞ்சாப் நோக்கிச் சென்ற சீக்கிய கிளர்ச்சி இராணுவ வீரர்கள், கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் குற்றவாளிகளாகக் காணப்படின் அவர்கள் தூக்கிலிடப்படுவார்கள்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சுமார் 1,000 சீக்கிய வீரர்கள் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் இந்தக் கிளர்ச்சி குறித்து இராணுவம் பாரதூரமான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கிறது.

அவர்கள் தற்போது கசப்பான பாடம் ஒன்றைப் படித்திருக்கிறார்கள். இந்திய இராணுவத்தில் இனிமேல் எவருமே

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஆபாச வெளியீடுகள்: தடை செய்யச் சட்டம்

கொழும்பு, ஜூன் 14

ஆபாச வெளியீடுகளைத் தடை செய்வதற்காகப் புதிய சட்டமொன்று கொண்டு வரப்படும்.

நீதியமைச்சர் கலாநிதி நிஸ்ஸங்கா விஜேரத்ன செய்த சிபார்சைத் தொடர்ந்து அமைச்சரவை இதற்கு அங்கிகாரம் வழங்கியது.

மதத் தலைவர்களாலும்,

(2ஆம் பக்கம் பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

## போதைப் பொருள் பாவனைத் தடுப்பு:

# சுமித்ரயோ இயக்கத்துக்கு அரசு பூரண ஆதரவளிக்கும்

# ஜனாதிபதி உறுதி

கொழும்பு, ஜுன் 14

போதைப் பொருள் பாவனையைத் தடை செய்யும் நோக்குடன் அது தொடர்பான கல்வி அறிவைப் பரப்புவதில் அக்கறை கொண்டிருக்கும் "சுமித்ராயோ" இயக்கத்துக்கு அரசாங்கம் பூரண ஆதரவு வழங்கும்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

சுமித்ரயோ இயக்கத்தினரின் ஏற்பாட்டால் அமைக்கப்பட்ட "மெல்-மெதுர" நிலையத்தை செவ்வாயன்று ஜனாதிபதி திறந்து வைத்தார்.

இந்த நிலையத்துக்கான கட்டடம் திருமதி ஜோன் டீ மெல் என்பவரால் அவரது கணவரின் ஞாபகார்த்தமாக நன்கொடையாக வழங்கப்பட்டது.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது.-

போதைப் பொருள் பாவனை தொடர்பான குற்றங்களுக்கு நாம் மரண தண்டனையை அறிமுகப்படுத்தியிருக்கிறோம்.

கவனயீனமாக வாகனம் ஓட்டுபவர்களுக்கும் மரண தண்டனை வழங்கக் கூடியதாக சட்டம் கொண்டு வர வேண்டும் என நான் கருதுகிறேன்.

கவனயீனமாக வாகனம் செலுத்துவோரால் இன்று இறப்பு விகிதம் அதிகரித்து வருகின்றது.

அதனால் தான் கவலையீனமாக நடந்து கொள்ளும் வாகன ஓட்டிகளுக்கும் மரண தண்டனை வழங்க வேண்டுமென நான் கருதுகிறேன்.

இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

மேற்படி "மெல் மெதுர" நிலையம் போதைப் பொருள் பிரச்சினைகள் சம்பந்தமான ஆராய்ச்சிகளையும் —

போதைப் பொருள் பாவிப்பவர்களைச் சீர்திருத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். (எ—8)



சுமித்ரயோ இயக்கத்தின் ஆதரவில் அமைக்கப்பட்ட "மெல்—மெதுர" — நிலைய திறப்பு விழாவுக்கு வருகை தந்த ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, இளம் அமைச்சர்களான லலித் அத்துலத் முதலி, காமினி திஸாநாயக்கா ஆகியோருடன் சுவாரஷ்யமாக உரையாடிக் கொண்டிருப்பதைப் படத்தில் காண்க. (எ*ச)

## கடிதம் கிடை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் மூவாயிரம் பேர் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஆனால் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவினரால் நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அழைப்புக் கடிதங்கள் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லையெனப் பலர் இ. தொ. கா. தலைமைக் காரியாலயத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான், இ. தொ. கா- பொதுச் செயலாளர் திரு. எம். எஸ்- செல்லச்சாமி, ஆசிரியர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. கே- சிவஞானம் ஆகியோர் கல்வி அமைச்சருடன் இது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தினர்.

நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பவர்களின் சுட்டிலக்கப் பட்டியலை இவர்களிடம் கொடுத்தார். கல்வி அமைச்சர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக் கடிதங்கள் கிடைக்காதவர்கள் தத்தமது பகுதிப் பிரதிக் கல்விப் பிராந்திய அலுவலகங்களில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு இறுதிநாளன்று தமது சான்றிதழ்களுடன் தோற்றலாம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

நுவரெலியா, பண்டாரவளை, கண்டி, கேகாலை, மாத்தளை மாவட்டங்கள் 19ஆம் திகதி இரத்தினபுரி மாவட்டம் 18ஆம் திகதி.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மூவாயிரம் பேரின் சுட்டிலக்கங்களும் அடங்கிய பட்டியல் தன்னுடைய மாநில காரியாலயங்கள் அனைத்திற்கும் இ. தொ. கா. அனுப்பி வைத்திருக்கிறது.

அழைப்புக் கடிதங்கள் கிடைக்காதவர்கள் தத்தமது பகுதியிலுள்ள இ. தொ. கா. காரியாலயங்களுக்குச் சென்று தாங்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்களா என்பதைப் பட்டியலைப் பார்த்து தெரிந்து கொள்ள முடியும்.

நேர்முகப் பரீட்சை நடைபெறும் மாவட்டங்களில், பரீட்சார்த்திகளுக்கான வசதிகளை செய்து கொடுக்கவும், சான்றிதழ்களை வழங்கவும் சில உயர் அதிகாரிகளை இ. தொ. கா. தலைமைப் பீடம் நியமித்துள்ளது. என இ. தொ. கா. பேச்சாளர் ஒருவர் தினபதிக்குத் தெரிவித்தார். (உ—ய)

## சட்ட திருத்த...

விததார்.

பத்திரிகைகள், பிரசுரங்கள், வெளியிடப்படும் ஆக்கங்கள், செய்திகளில் நிருபர்களின் பெயரை வெளியிடவும், புனை பெயரில் எழுது-வதைத் வதைத் தடை செய்யவும் திருத்தம் கொண்டுவருவதற்கு அமைச்சரவை கடந்த வாரம் அங்கீகாரம் வழங்கியது.

இது சம்பந்தமாகப் பல ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திருத்தங்களை மறுபரிசீலனை (மீளாய்வு) செய்யும் எண்ணம் உண்டா? என நிருபர் ஒருவர் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தின் பின் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கேட்டபோது —

அமைச்சர் "இல்லை" என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தார். (ண—8)

## சீக்கிய இராணு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிளர்ச்சி நடத்தத் துணிய மாட்டார்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு மகாராஷ்டிர மாநிலம் பூனாவில் இருந்து 126 சீக்கிய இராணுவ வீரர்கள் பஞ்சாப்புக்குப் புறப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களில் பாதிப்பேர் மகாராஷ்டிரத்தின் தேன் என்ற இடத்தில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டார்கள். மீதிப்பேர் சுமார் அரைமணி நேரம் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையின் பின்னர் சிறை பிடிக்கப்பட்டார்கள்.

இந்தச் சண்டையின் போது 13 சீக்கிய கிளர்ச்சி இராணுவ வீரர்களும், அரசுக்கு விசுவாசமான இராணுவ வீரர் ஒருவரும் மரணமானார்கள்.

எனது படைப் பிரிவு 7 தென் மாநிலங்களை உள்ளடக்கியிருக்கிறது. எனது படைப் பிரிவில் சுமார் 80,000 சீக்கிய வீரர்கள் இருக்கிறார்கள். இதனுடன்

## இலங்கையை அமெரிக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் செய்து கொள்ளலாம் என சில வட்டாரங்கள் — குறிப்பாக இந்தியா அச்சப்படுகிறது. இதுபற்றி கருத்துத் தெரிவிப்பீர்களா?

ப: இல்லை. எவருடனும் இராணுவ ஒப்பந்தம் செய்து கொள்ள நான் விரும்பவில்லை. "யங்கி டிங்" என்பது இப்பொழுது மறந்து போய் விட்டது. அநேக "டிக்"குகள் இப்பொழுது உள்ளன. "சீனு டிக், இந்திய டிக், ரஷ்ய டிக்" எவரும் இவற்றைக் குறிப்பிடுவதில்லை.

கே: அமெரிக்காவுக்கு எவ்வளவு தூரம் இலங்கை முக்கியம்?

ப: உலகின் மிக முக்கிய வல்லரசான அமெரிக்காவுக்கு, சிறு தேசங்கள் முக்கியமான நன்மைக்காக வல்லரசு நாடான அமெரிக்கா எவற்றைச் செய்ய முடியும்?

ப: அவற்றின் சுதந்திரம், கௌரவத்தைக் காப்பாற்றிக் கொடுப்பதே முக்கிய செயல், கடமையும் கூட.

கே: அண்மையில் செய்து கொண்ட எண்ணெய்க் குதாம் ஒப்பந்தம் சம்பந்தமாக?

ப: அமெரிக்காவுக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. அவர்களை நாம் கலந்து ஆலோசிக்கவில்லை. ஒப்பந்தத்தில் உள்ள எந்த ஒரு நிறுவனத்துடனும் அவர்களுக்குத் தொடர்பில்லை.

கே: இந்தியப் பத்திரிகைகளில் இது சம்பந்தமாக வெளி வந்த கண்டனங்கள் பற்றி உங்கள் கருத்தென்ன?

... கதைப்பதைத் தடுக்க முடியாது. எத்தகைய இராணுவத் தலையீடும் இருக்காதென்று இந்திய வெளிவிவகார அமைச்சர் தெளிவாகக் கூறிவிட்டார்.

கே: இலங்கையின் சுதந்திரத்தையும், இறைமையையும் பாதுகாக்க பிராந்தியத்துக்கு வெளியேயுள்ள சிநேக நாடுகளின் விசேஷ உத்தரவாதம் இருக்க வேண்டும் என விரும்புகிறீர்களா?

ப: அப்படி நான் நினைக்கவில்லை. இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார். (க)

## பரீட்சை நிலைய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரத்தினபுரி மாவட்டத்தில் ...

## தண்ணீர் பாவனைக்குக் கட்டணம்

# மத வழிபாட்டு தலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஜுன் 14

தண்ணீர் பாவனைக்கு மாதாந்தக் கட்டணம் அறவிடுவதில் இருந்து சகல மத வழிபாட்டுத் தலங்களுக்கும் விதிவிலக்கு அளிக்க வேண்டும்

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசவிடம் கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

இது தொடர்பாகப் பிரதமருக்கு கொழும்பு பெரிய பள்ளிவாசலின் தலைவர் அல்ஹாஜ் ... றுக்கும் இந்தத் தண்ணீர் பாவனைக் கட்டணத்தில் இருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும்.

இவ்வாறு அல்ஹாஜ் தஹ்லான் தொடர்ந்து தமது மகஜரில் தெரிவித்திருக்கிறார். (எ—7)

## பொசன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதவழிபாடு நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினர்.

மிஹிந்தலை, அநுராதபுரம், திஸ்ஸமகராம, கண்டி தலதா மாளிகை, பொலன்னறுவை ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கில் பௌத்தர்கள் கூடி மதவழிபாடு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டனர். (ண—7)

## தொலைபேசி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டேகு ஜயவிக்கிரமா இதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ...

தொலைத் தொடர்பு குறிப்பாக தொலைபேசிச் சேவையில் நிலவும் குறைபாடுகளை நீக்கு ...

கே: அமெரிக்காவுக்கு எவ்வளவு தூரம் இலங்கை முக்கியம்?

ப: உலகின் மிக முக்கிய வல்லரசான அமெரிக்காவுக்கு, சிறு தேசங்கள் முக்கியமானவையே.

கே: இலங்கையின் பாதுகாப்புக்கு அமெரிக்கா எவ்வாறு கடமைப்பட்டுள்ளது.

ப: சிறு தேசங்களின் சுதந்திரத்துக்கும், பாதுகாப்புக்கும் அவை கடமைப்பட்டுள்ளன என்பது ஐக்கிய நாடுகள் சபை சாசனத்தில் உள்ளது.

கே: இன்றைய நிலையில் குறிப்பாக இலங்கைக்கு இது முக்கியமா?

ப: எங்களுக்கு இது தேவை. எல்லா சிறு தேசங்களையும் பாதுகாக்க வேண்டியது அவர்களது கடமை.

கே: கடந்த சில வருடங்களாக இலங்கை அமெரிக்காவுடன் நெருங்கி வருகிறதா?

ப: முன்பிருந்ததை விட நெருக்கமா என்பது பற்றி எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்த வரையில் திருமதி பண்டாரநாயக்கா வெகு நெருக்கமாக இருந்தார்.

கே: இலங்கையைப் போன்ற சிறு ஜனநாயக நாடுகளின் உள்ள எந்த ஒரு நிறுவனத்துடனும் அவர்களுக்குத் தொடர்பில்லை

கே: இந்தியப் பத்திரிகைகளில் இது சம்பந்தமாக வெளிவந்த கண்டனங்கள் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: நான் அவற்றைக் கவனத்தில் எடுப்பதில்லை. அது ஒரு சுதந்திர நாடு. அமெரிக்கா சம்பந்தப்பட்டிருந்தால் என்ன? அது எங்கள் வேலை, எங்கள் விவகாரம்.

கே: எண்ணெய்க் குதாம் ஒப்பந்தம் அமெரிக்காவுடன் சம்பந்தப்படாபடியால், அது பற்றி ஏதும் கூறுவீர்களா?

ப: நல்ல பலனைப் பெற வேண்டும். எந்த அடிப்படையிலேயே கருமமாற்றினோம். நாட்டைப் பொறுத்தல்ல. தனிப்பட்ட அமெரிக்க நிறுவனம் என்றாலும் எமக்கு நன்மை கிட்ட வேண்டும். எவை நல்ல பலன் தரும்? அது எங்கள் எங்கள் விவகாரம். வேறெவரதும் அல்ல.

கே: இந்தியா பங்கு வகிப்பதற்கும் நீங்கள் சந்தர்ப்பம் அளித்தீர்கள்தானே?

ப: வருங்காலத்துக்கு, ஆம்.

கே: அமெரிக்காவுடன் விஞ்ஞான, தொழில்நுட்ப ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள விரும்புகிறீர்கள் என அறிகிறேன்?

ப: அதைப் பற்றி கருத்து வெளியிட முடியாது. ஏனெனில் அதில் உள்ள நிபந்தனைகள் என்னவென்பதை நான் அறிய வேண்டும். ஆனால் அது எங்களுக்குப் பயன் அளிக்கக் கூடியது. இதனையே நான் குறிப்பாக வலியுறுத்த விரும்புகிறேன்.

கே: இந்திய மத்திய அரசை, தமிழ்நாடு வற்புறுத்தி வருவதனால் அந்தப் பிராந்தியத்தில் இலங்கையின் பாதுகாப்பு எப்படி இருக்குமென அனுமானிக்க முடியுமா?

ப: வற்புறுத்தல் எதற்கு?

கே: மத்திய அரசாங்கம் தலையிட வேண்டுமென தமிழ்நாடு வற்புறுத்துவதாக புகார்கள் உள்ளனவே?

ப: எந்த வழியில்? இராணுவ ரீதியிலா? அது ஆக்கிரமிப்பாகும்.

கே: அது விடயமாக அபிப்பிராயம் கூறுவீர்களா?

ப: அணிசேரா இயக்கத்தின் தேவையை, ஆக்கிரமிப்பு தோல்வி அடையச் செய்து விடும்.

கே: உபதேசங்கள் பற்றி குறிப்பாக தென் இந்தியாவின் உபதேசம் என்ன நினைக்கிறீர்கள்?

ப: அவை எல்லாம் எமது அணிசேராக் கொள்கைக்கு எதிரானவையாகும். தமிழ்நாடு அரசாங்கம்தான் அதைச் சொல்கிறதென நான் நினைக்கவில்லை. அவை சில உடைந்த பானைகளாக இருக்கும். பிறர்

## லிபிய காரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வர்.

19 ஆம் திகதி அக்கரைப்பற்று பெரியபள்ளிவாசலுக்கும், 20 ஆம் திகதி அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசலுக்கும், சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலுக்கும், மருதமுனை ஜும்ஆப் பள்ளிவாசலுக்கும் 21 ஆம் திகதி சம்மாந்துறை ஜும்ஆப் பள்ளிவாசலுக்கும், நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கும் இவர்கள் விஜயம் செய்வர்.

இந்தக் "காரி" மார்கள் கிராஅத் ஓதுவதோடு மார்க்கப் பிரசங்கங்களையும் நிகழ்த்துவர்.

எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் இவர்கள் கொழும்பிலுள்ள பள்ளிவாசல்களுக்கு விஜயம் செய்வர்.

(ண-7)


தினபதி

சிறு விளம்பரம்

**பத்று மௌலூத்**

பத்று மௌலூத், புர்தா ஷரீப் பதிவு செய்யப்பட்ட கஸட்கள் விற்பனைக்கு உண்டு.

**Twinkle, P1, Front Street, Colombo 11.**

032033


வித்தார்.

(க)

## பரீட்சை நிலைய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரத்தினபுரி மாவட்டத்தில் 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் மட்டுமே நடைபெறும் என கல்விச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில், இரத்தினபுரி, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை, கொழும்பு ஆகிய கல்வி வட்டாரங்களைச் சேர்ந்தவர்களுக்கும், பண்டாரவளையில் பண்டாரவளை, மொனராகலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய கல்வி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும், கேகாலையில் கேகாலை, குருநாகல் புத்தளம், கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

கண்டி, நுவரெலியா ஆகிய இரு மாவட்டங்களிலும் தனித்தனியாக அந்தந்தப் பிராந்தியக் கல்விக் காரியாலயத்திற்கு உட்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மட்டும் நேர்முகப் பரீசை நடத்தப்படும்.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பின்வரும் சான்றிதழ்களைக் கொண்டு செல்ல வேண்டும்.–

- ★ பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் உண்மையான முழுப் பிரதி.
- ★ பெயர்களில் ஏதும் மாற்றங்கள் இருப்பின் சமாதான நீதிவான் முன் உறுதி செய்யப்பட்ட சத்தியக் கடதாசி.
- ★ தேசிய அடையாள கார்ட்.
- ★ கல்வித் தராதரப் பத்திரங்கள்.
- ★ கிராம சேவகரின் சான்றிதழ் (உதவி அரசாங்க அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்).
- ★ இறுதியாகப் படித்த பாடசாலை அதிபரினால் வழங்கப்பட்ட குணவியல்புச் சான்றிதழ்.
- ★ பெற்றோரும் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்தியும் நிரந்தரமாக தோட்டத்தில் வசிப்பதை உறுதிப்படுத்தும் தோட்ட அதிகாரியின் சான்றிதழ்.
- ★ பொதுநல, சிரமதான, சமூக சேவை முயற்சிகளில் ஈடுபட்டிருந்தால் அவற்றிற்குரிய சான்றிதழ்கள்.
- ★ விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள்.

தொண்டர் ஆசிரியர்கள் அல்லது வசதிக் கட்டண நிதியைப் பெற்று கடமையாற்றுபவர்களினது சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரின் அத்தாட்சிக் கடிதங்கள் வட்டாரக் கல்வி அதிகாரியினால் உறுதி செய்யப்படிருக்க வேண்டும்.

பாடசாலை விடுகைப் பத்திரம். வாக்காளர் இடாப்பின் தனது பெற்றோரினதும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, பிரஜா உரிமைப் பத்திரம் என்பனவற்றையும் பரீட்சார்த்திகள் தம்முடன் கொண்டு வர வேண்டும் எனவும் கல்விச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது.

(ண-ய)

பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

இது தொடர்பாகப் பிரதமருக்கு கொழும்பு பெரிய பள்ளிவாசலின் தலைவர் அல்ஹாஜ் எம். எச். எம். தஹ்லான் மகஜர் ஒன்றையும் அனுப்பியிருக்கிறார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.–

அநாதை நிலையங்கள், முதியோர் இல்லங்கள், அங்கவீனர் பராமரிப்பு நிலையங்கள், குணப்படுத்த முடியாதவர்களைப் பராமரிக்கும் நிலையங்கள் —

சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை திணைக்களத்திலும் சமூக சேவைகள் திணைக்களத்திலும் பதிவு செய்யப்பட்ட சமூக சேவா நிறுவனங்கள் ஆகியவற்

## தொலைபேசி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டேகு ஜயவிக்கிரமா இதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா தபால் தந்தி தொலைத் தொடர்புகள் அமைச்சர் திரு. ரீ.பி. விஜேதுங்க ஆகியோர் இந்த உபகுழுவின் ஏனைய அங்கத்தவர்களாவர்.

முன்னர் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் நிலவும் பாஸ்போர்ட் ஊழல்களை நீக்குவதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவே தற்போது தொலைத் தொடர்பு குறிப்பாக தொலைபேசிச் சேவையில் நிலவும் குறைபாடுகளை நீக்குவதற்காக, சம்பந்தப்பட்ட அமைச்சர் திரு. ரீ. பி. விஜேதுங்காவை உள்ளடக்கிப் புதிதாக நியமிக்கப்படவுள்ளது.

தொலைத் தொடர்புத் திணைக்களத்தை கூட்டுத்தாபனமாக்குவதற்கான சாத்தியங்கள் பற்றி நிபுணர்கள் குழுவொன்று ஆராய்ந்து வருவதாகத் தபால் தந்தித் தொலைத் தொடர்புகள் அமைச்சர் திரு. விஜேதுங்க அமைச்சரவைக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் செயற்படும் இந்த நிபுணர்கள் குழுவில் கலாநிதி சிறில் பொன்னம் பெரும, திரு. ஆர்தர், சீ. கிளாக், கலாநிதி ஆர். ஜெயவர்த்தன ஆகியோர் இடம் பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொலைத் தொடர்புச் சேவைகளைப் பிரத்தியேக மயப்படுத்த வேண்டும் என்று பிரிட்டன் நிறுவனம் ஒன்று செய்த சிபார்சையும் மேற்படி நிபுணர்கள் குழு ஆராய்ந்து வருகிறது.

தொலைபேசிச் சேவைகள் கொழும்பும் மற்றும் நகரப் புறச்சேவை, கிராமப் புறச் சேவை என இருவகையாகப் பிரித்து மறுசீரமைக்கப்படவிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ண-8)

ஒருவரும் மரணமானார்கள்.

எனது படைப் பிரிவு 7 தென் மாநிலங்களை உள்ளடக்கியிருக்கிறது. எனது படைப் பிரிவில் சுமார் 80,000 சீக்கிய வீரர்கள் இருக்கிறார்கள். இதனுடன் கிளர்ச்சி நடத்தியவர்களின் எண்ணிக்கையை ஒப்பிடும் போது மிகச் சொற்பமானவர்களே கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று கூறமுடியும்.

இப்படி அந்த இராணுவ அதிகாரி சொன்னார்.

இதேவேளையில் 800 சீக்கிய கிளர்ச்சி இராணுவ வீரர்களும், 600 சீக்கிய தீவிரவாதிகளும் உத்தரபிரதேச அதிகாரிகளிடம் சரணடைந்தார்கள்.

திரிபுராவிலும் தீவிரவாதிகளினால் தூண்டிவிடப்பட்ட சீக்கிய இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டார்கள் அல்லது இராணுவ முகாமுக்கு திருப்பி அனுப்பப்பட்டார்கள் எஞ்சிய சிலர் விரைவில் கைது செய்யப்படுவார்கள்- இப்படி பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் சொன்னார்.

இதேவேளையில் சீக்கிய பொற் கோயிலில் உள்ள தடாகத்தில் இராணுவ சுழியோடிகள் தேடுதல் நடத்தினார்கள்.

சக்தி வாய்ந்த ஒலிபரப்பு சாதனம், டெலிபிரின்டர், யந்திரத் துப்பாக்கிகள், 111 சாதாரண துப்பாக்கிகள் ஆகியன தடாகத்தில் இருந்து கைப்பற்றப்பட்டன.

பஞ்சாப்பில் சுமார் 3,038 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

(ண)

## மின்சாரக் கட்டண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென விசேஷ கட்டண மீளாய்வுக் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

எரிசக்தி, மின்சக்தி அமைச்சு இந்தக் கமிட்டியை நியமித்திருக்கிறது.

அடுத்த வருட ஆரம்பத்தில் அதிகரிக்கப்படும் மின்சார கட்டண முறைகள் எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றி இந்தக் கமிட்டி அறிக்கை சமர்ப்பிக்கும்.

வர்த்தகப் பிரிவுகளில் மின்சாரக் கட்டணங்களை எவ்வாறு அதிகரிப்பது என்பது பற்றியும், எதிர்காலங்களில் மின்சார சபை மூலம் நடைமுறைப் படுத்தப்படும் பிரதான அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் தொகை, புதிய மின்சார நிலையங்களை நிறுவுவதற்கு ஏற்பட்ட செலவுக்கு ஏற்ப மின்சாரக் கட்டணங்களை அதிகரித்தல் ஆகியன பற்றியும் இந்தக் கமிட்டி ஆராயும்.

மீளாய்வுக் கமிட்டியின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் அடுத்த வருடத்துக்கான மின்சாரக் கட்டணங்களும் அதிகரிக்கப்படும் என்று எரிசக்தி, மின்சக்தி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த வருடம் முடிக்கப்படும் விக்டோரியா, கொத்மலை ஆகிய மின்சார உற்பத்தி நிலையங்களுக்காக, இலங்கை மின்சார சபை 700 கோடி ரூபாவை அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டியிருக்கிறது.

இதனாலேயே, மின்சார கட்டணங்களை அதிகரிக்க வேண்டியிருக்கிறது; எனவும் அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

(ண-11)

## இன்றிரவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறமாட்டா.

ஜனாதிபதி தம்பதியர் இன்றிரவு 9.30 மணியிலிருந்து 10.30 மணிவரை, நண்பர்களையும் அபிமானிகளையும், ஜனாதிபதி மாளிகையில் சந்திப்பர்.

அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு, இம்மாதம் 30 ஆம் திகதி, ஜனாதிபதி தம்பதியர் நாடு திரும்புவர்.

(ண-க)

## ஆபாச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொது மக்களாலும் செய்யப்பட்ட தொடர்ச்சியான முறைப்பாடுகளைத் தொடர்ந்தே நீதியமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஆபாச வெளியீடுகள் தொடர்பாகப் போதிய கட்டுப்பாடுகள் செலுத்தப்படுவதில்லை என முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் ஆபாச வெளியீடுகள் தொடர்பாக அமுலிலுள்ள 1927 ஆம் ஆண்டின் சட்டம் தற்காலத்தில் தோன்றியுள்ள இது தொடர்பான பிரச்சினைகளைக் கையாளுவதற்குப் போதுமானதாயில்லை.

எனவேதான் இது சம்பந்தமாகப் புதிய சட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

(ண-8)

## 16 பயங்கரவாத...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பப்படுகிறது.

வண. பிதா சிங்கராயரும், திருமதி நிர்மலா நித்தியானந்தனும் 1982 நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டார்கள்.

சாவகச்சேரி வங்கிக் கொள்ளைச் சந்தேக நபர்களுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டு இவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருக்கிறது.

சாவகச்சேரி வங்கியில் கொள்ளையிடப் பட்ட பொருள்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டும் திருமதி நித்தியானந்தனுக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு சந்தேக நபர்களையும் விடுதலை செய்யும்படி, கடந்த மே மாதம் 18 ஆம் திகதி, நீதி அமைச்சரிடம் ஒரு மகஜரைச் சமர்ப்பித்துள்ளதாக, இவர்கள் இருவருக்குமாக ஆஜராகும் சட்டத்தரணி திரு. பாலாதம்பு தெரிவித்தார்.

இந்த மகஜர் சம்பந்தமாக அரசாங்கம் ஒரு முடிவு எடுக்கும்வரை, இந்த வழக்குகளை விசாரிக்க வேண்டாம் என சட்ட மா அதிபரைத் தான் கேட்டுள்ளதாகவும் திரு. பாலாதம்பு தெரிவித்தார்.

(ண-க)

## றேகனுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)


குட்டிக்கு வயது ஒன்றரை. 290 இருத்தல் எடையுள்ளது. அமெரிக்க தேசிய மிருகக் காட்சிச் சாலையில் அது வைத்துப் பாதுகாக்கப்படும்.

இலங்கை ஜனாதிபதி தம்பதியர் வாஷிங்டன் வந்த பின்னர் ஜயத்துவையும் சென்று பார்ப்பார்.

இலங்கை யானைகள் சரணாலயத்தில் இருந்த இந்த யானைக் குட்டி, விமானம் மூலம் நியூயோர்க் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கிருந்து லொறி மூலம் அது வாஷிங்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

(ண-க)

கந்தப்பு வாத்தியார்: — செல்வா




# பூர்த்தியாகாத நிலையில் குழாய்க் கிணறுகள்

பொத்துவில், ஜூன் 13

பொத்துவில் உதவி அரச அதிபர் பிரிவில் ஐந்து குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டன. இவை தோண்டப்பட்டு சுமார் ஒரு வருடமாகின்றது. ஆனால் இன்னும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் காணப்படுகின்றது.

பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏத்தம் ஹிதாயாபுரம் கனகர் கிராமம், சங்கமான் கிராமம் ஆகிய இடங்களிலேயே இக் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டன.

பொத்துவிலில் தற்போது வரட்சிக் காலம் தொடங்கி இருக்கிறது இன்ஸ்பெக்டர் ஏத்தம், ஹிதாயாபுரம் ஆகிய பகுதி மக்கள் குடி தண்ணீருக்காக ஒரு மைல் தொலைவில் உள்ள பொத்துவிலுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

சங்கமான், கனகர் கிராம மக்கள் சுமார் இரண்டு மைல் தொலைவில் உள்ள கோமாரிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

குடி தண்ணீர் பிரச்சினையை தீர்க்க விரைவில் கிணற்று வேலைகளை பூர்த்தி செய்து தர வேண்டுமென்று பொதுமக்கள் கோரியிருக்கிறார்கள். (ல—247)

# இளவரசியின் இளமைக்கு வந்தது ஆபத்து

படிப்பிலும், விளையாட்டிலும் கெட்டிக்காரி இளவரசி பள்ளிக்கூடத்தில் நடந்த விளையாட்டு போட்டிகள் அனைத்திலும் அவருக்கே வெற்றி!

வெற்றிகளைக் குவித்த இளவரசிக்கு பள்ளியில் நடந்த ஒரு விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசுகள் வழங்கி பாராட்டியவரோ அந்த ஊரின் பெரிய மனிதன்.

பரிசு பெறும்போது இந்த மனிதன் காதல் வெறி கொண்டு இளவரசியை பார்த்துக் கொண்டே இருந்தான். அழகை சுவைக்க மனசுக்குள் கங்கணம் பூண்டான்.

இந்த நிலையில் இளவரசி பரிசு பெற்றதை மோகன் நிருபராக பணிபுரிந்த பத்திரிகை "போட்டோ"வுடன் செய்தியும் போட்டது.

என்று இளவரசி பரிசு பெற்ற செய்தி வந்ததோ, அன்று மறுநாள் "இளவரசி படுகொலை செய்யப்பட்டார்!" என்ற செய்தியும் அதே பத்திரிகையில் பரபரப்புடன் வெளியானது. இளவரசியின் தந்தை கதறினார். ஊர் மக்கள் உள்ளம் கொதித்தனர்.

இளவரசியின் படுகொலைக்கு காரணம் யார்? அந்த பெரிய மனிதன் தான் காரணமா?



இளவரசி

இவை போன்ற திகில், மர்மம், பரபரப்பு நிறைந்த இந்த காட்சிகள் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் "நூறாவது நாள்" படத்தை அடுத்து திருப்பதிசாமி பிக்சர்ஸ் அளிக்க எஸ். என். எஸ். திருமால் பிரமாண்டமான முறையில் வளர்த்து வரும் "24 மணி நேரம்" என்ற படத்துக்காக படம் ஆக்கப்பட்டன.

பெரிய மனிதனை நடிப்பவர் சத்யராஜ். ஜெய்சங்கர் முக்கிய வேடம் ஒன்றில் நடிக்கிறார். நளினி, சுவப்னு, வடிவுக்கரசி சங்கிலி முருகன், பயில்வான் ரங்கநாதன், செந்தில் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.



கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# புனர்வாழ்வு உதவி வழங்க வேண்டும்

கொழும்பு, ஜூலை 14

ஜூலை வன்செயலினால் பாதிக்கப்பட்டு உறவினர், நண்பர்கள் வீட்டில் தஞ்சம் புகுந்தவர்களுக்கும் உடனடியாக புனர்வாழ்வு உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

## உறவினர் வீடுகளில் தங்கி இருப்போர் சார்பாக வேண்டுகோள்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வட பிராந்திய அமைப்பாளர் திரு. பி. மதுரப்பிள்ளை புனர் வாழ்வுத்துறை அமைச்சின் செயலாளரிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

கடந்த வருடம் ஜூலை கலவரங்களின் போது பாதிக்கப்பட்ட மலையக மக்களும் நகர்ப்புறத்தவர்களும் வவுனியாவிலிருக்கும் தமது நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

தமது உடைமைகளையும் இருப்பிடங்களையும் இழந்து இவ்வாறு வந்தவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் எவ்வித நிவாரண உதவிகளும் கிடைக்கவில்லை.

இது சம்பந்தமாக திரு. மதுரப்பிள்ளை, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடமும் மேலதிக அரசாங்க அதிபரிடமும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அத்துடன் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமும், புனர் வாழ்வுத் துறை அமைச்சின் செயலாளருமான ரியர் அட்மிரல் பெரேராவிடம் இது சம்பந்தமாக விளக்கியிருக்கிறார்.

வவுனியாவில் போக்கிடமின்றி இருக்கும் இவர்களுக்கு புனர் வாழ்வு வசதிகளைப் பெற்றுக் கொடுக்க உயர்மட்ட நடவடிக்கை எடுக்கும்படி, கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானிடமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (ல—ய)

# சிறந்த உ[illegible]ாக்களாகி

புதை பொருள்



"எத்தனையோ மூத்த கதாநாயகர்களின் கரங்கள் தவழ்ந்த வன் கூந்தலில் இன்னும் இளமை யின் அழகு பளிச்சிடுகிறதே" என்று கராத்தேமணி கே. ஆர்.விஜயாவிடம் கூறுகிறாரோ? படம்: தங்கக் கோப்பை. (ல-10)

நளினி, சுவப்னு, வடிவுக்கரசி சங்கிலி முருகன், பயில்வான் ரங்கநாதன், செந்தில் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

இளையராஜா இசை அமைக்க கதை திரைக்கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார். மணிவண்ணன். (ஜு-10)

# பெண்ணுக்கு அழகு தருவது எது?

## படப்பிடிப்பில் உரையாடல்

சேஷசாயி பிலிம்சின் "அழகு" என்ற படத்தின் இறுதிக் கட்ட படப்பிடிப்பு சென்னையில் உள்ள ஒரு பங்களாவில் நடந்து கொண்டிருந்தது.

வை. ஜி. மகேந்திரன் - வனிதா நடித்த "காமெடி" காட்சி படப்பிடிப்பு முடிந்ததும் இவர்கள் இருவருடன் "அழகு" பட அதிபர் ஏ. சுந்தரம் பேசிக் கொண்டிருந்தார். அந்தப் படம் பற்றி 3 பேரும் நகைச்சுவையுடன் உரையாடிக் கொண்டிருந்தனர்.

இதோ அந்த உரையாடல்:

வை. ஜி. மகேந்திரன்:- சுந்தரம் சார்! இது என்ன பிற மொழி தழுவல் கதையா? இப்போது தழுவல் விஷயங்கள் தானே பெரும்பாலும் திரைக்கு வருகிறது. இது எப்படி?

பட அதிபர் சுந்தரம்:- இங்கு யாருக்கும் குறைந்தவர்கள் உள்ள கதாசிரியர்கள் என்ன இல்லையே! எனது நண்பர் தாமரைமணாளன் "அழகு" என்ற பெயரில் எழுதிய நாவலைப் படித்தேன். அதில் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு எவ்வளவு வேதனையான சோதனைகள் ஏற்படுகின்றன என்பதை விளக்கி எழுதப்பட்டிருந்தது. அழகு என்ற பெயரும், கதையும் பிடித்ததால் படமாக்க முன் வந்தேன். எவ்வளவோ சங்கடங்களைத் தாண்டி இன்றுடன் படத்தை முடித்து விட்டேன்.

வனிதா:- நான் இன்னும் படத்தின் "ரஷ்" (இதுவரை எடுத்த காட்சிகளை நடிகர்கள் - நடிகைகளுக்கு திரையிட்டு காட்டுவது) பார்க்கவில்லை. மகேந்திரன் பார்த்ததாகச் சொன்னார். அழகு என்றால் பெண்ணின் அழகைத் தானே குறிப்பிடுகிறது?

மகேந்திரன்.- இதற்கு நானே பதில் சொல்கிறேன். அழகு என்றால் சிவப்பு நிறமாக சீவி சிங்காரித்து அன்னநடை போடுவதை காட்டுவது அல்ல! ஒரு பெண்ணுக்கு உண்மையிலேயே அழகு தருவது அவளுடைய ஒழுக்கமே அழகு. இந்தப் படத்தில் வருகிற கதாநாயகி குடும்ப கஷ்டம் போக்க வேலைக்குப் போகிறாள். அவளுடைய உள் மனதைப் புரிந்து கொள்ளாமல் அவளுடைய கற்பைப் பறிக்க முயல்கின்றனர், ஒரு சிலர். அவளோ தனக்கு வந்துள்ள இந்த சோதனையை வெளியில் சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் தவிக்கிறாள். வீட்டிலும் சொல்ல முடியாது.

வனிதா:- எனக்குத் தெரிந்த ஒரு பெண்கூட இப்படிப்பட்ட தொல்லையில் சிக்கி, அதை வீட்டிலே சொல்ல, அவள் மீது தான் குடும்பத்தினர் சீறிப் பாய்ந்தனர். ஏனென்றால் பெண் ஆயிற்றே! அவள் நிரபராதி என்றாலும் ஊரும் உலகமும் அவள் மீது தானே பழி சுமத்தும்.

மகேந்திரன்:- கதாநாயகி தான் இப்படியென்றால் ரேகா என்ற கதாபாத்திரத்தில் நடிக்கும் இன்னொரு பெண் சந்தர்ப்ப சூழ்நிலையினால் தன்னைக் கெடுத்தவனை இறுதிவரை துணிச்சலாக எதிர்த்து நின்று சமாளிக்கிறாள். இந்த இருவரில் வனிதா எந்த ரகம்?

வனிதா.- நான் ஏமாறவும் மாட்டேன். ஏமாற்றியவனை விடவும் மாட்டேன். ஏன் சார்! நீங்கள் எந்தப் பெண்ணிடமாவது இடைஞ்சல் செய்து இருக்கிறீர்களா?

மகேந்திரன்:- இடைஞ்சல் இப்போது உன்னிடம் இருந்து தான் ஆரம்பித்து இருக்கிறது. இடைஞ்சல் பண்ணிவிட்டால் எங்கள் வீட்டில் என்ன ஆகுமோ ஏது ஆகுமோ?

வனிதா.- என்கிட்ட நடக்குமா? நடக்க விடுவேனா?

மகேந்திரன்.- கோபப் படாதே! உன்னிடம் ஒன்று கேட்கிறேன். இந்தப் படத்துல ஒரு பொண்ணு தனது இக்கட்டான நிலைமையை சமாளிக்க பணத்துக்குப் பணிந்து கற்பை இழந்து விடுகிறாள். இதற்கு உன் பதில் என்ன?

வனிதா:- எனக்குத் தெரிந்த ஒரு இடத்திலேயே இப்படி நடந்தது உண்டு. ஒரு குடும்பத்தில் 7 பெண்கள். குடும்பத்தைக் காப்பாற்ற பெற்றோரே "ரெட் லைட் ஏரியா" (சிவப்பு விளக்குப் பகுதி) பெண்களாக ஆக்க முயற்சி செய்ததை தெரிந்து வேதனைப்பட்டேன். இதுபோல எவ்வளவோ நடக்கிறது.

மகேந்திரன்:- ஆனால் ரேகா என்ற இந்தப் பெண்ணு ஒரே இடத்தில்தான் தவறினாள். அதற்கு தகுந்த முடிவும் எடுத்து வெற்றி பெற்றாளே!

வனிதா.- பொதுவாகச் சொல்கிறேன். நடிகைகள் என்றாலே ஏதோ ஒரு மாதிரிதான் பார்க்கிறாங்க! இது எவ்வளவு தப்பு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பகட்டும், படாடோபமும் சினிமா நடிகைகளை விட வெளி உலகத்தில் தான் அதிகம் இருக்கிறது.

மகேந்திரன்:- வனிதா நாம் இருவரும் "காமெடி"யில் நடிக்கிறோமே! இந்தக் காமெடிக் காட்சியை என் தாயார் ராஷ்மியும், மனைவி சுதாவும்தான் சேர்க்கச் சொன்னார்கள். என் தாயாருடன் 20 பெண்கள் "ரஷ்" பார்த்து ரசித்தார்கள். நான் பொய் சொல்லி உன்னைக் காதலிப்பதும், என்னையும் மிஞ்சி நீ பெரிய பணக்காரி என்று பொய் சொல்லி என்னை ஏமாற்றுவதும் எப்படி?

வனிதா:- படத்தில் ஏமாற்றலாம். என் வாழ்க்கையில் யாரும் ஏமாற்ற முடியாது. நானும் ஏமாற்ற மாட்டேன்.

மகேந்திரன்.- காதல் வலையில் மாட்டினால் நீயும் ஏமாறுவது நிச்சயம்!

வனிதா:- நான் இன்னும் காதலிக்கவில்லையே! இனி மேல்தான் என்று வனிதா மெல்ல முணுமுணுக்க, "டேக் ரெடி" என்று குரல் கொடுத்தார், டைரக்டர் விஜயன். (ஜு-10)

# சிறந்த உலமாக்களாகி மார்க்க தத்துவத்தை பரப்புங்கள்

## மன்சூர் புத்திமதி

சாய்ந்தமருது, ஜூன் 13

"அரபுக் கல்லூரியில் மார்க்கக் கல்வி கற்பவர்கள் சிறந்த உலமாக்களாக வெளியேறி எமது சமூகத்தில் மார்க்கத் தத்துவத்தை பரப்ப வேண்டும்."

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும், கல்முனை நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப் ஏ. ஆர். மன்சூர் இவ்வாறு புத்திமதி கூறினார்.

கல்முனை அல் - ஹாமியா அரபிக் கல்லூரியின் 5 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்படி மதரசா வளவில் அண்மையில் பொதுக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே மாவட்ட அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

போக்குவரத்து, முஸ்லிம் சமய கலாசார அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இக் கூட்டத்திற்கு கல்லூரி அதிபர் மௌலவி எஸ். எம். எம். சாஹிப (கபூரி, நத்வி) தலைமை வகித்தார்.

ஜனாப் மன்சூர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

மார்க்க அடிப்படையில் உரை நிகழ்த்துவதற்கு நாம் உலமாக்களல்ல. நாங்கள் அரசியல் அடிப்படையில் சேவை செய்ய வந்தவர்கள் இக்கைங்கரியத்தை மேற்கொள்ளும் போது பல சிக்கல்கள் ஏற்படத்தான் செய்கின்றன.

1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு எமது நாட்டில் பல அபிவிருத்தித் திட்டங்களையும், வளர்ச்சிகளையும் காணக் கூடியதாக இருக்கிறது. அதேநேரம் பிரச்சினைகளையும் எதிர் நோக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எமது நாடு வளர்ச்சியும், அபிவிருத்தியும் அடைந்துவரும் இக்கால கட்டத்தில் பிரச்சினைகளையும் எதிர் நோக்குகிறது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் எதற்கெடுத்தாலும் மக்கள் இன அடிப்படையில் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்- இதனால் நாடு அபிவிருத்திக்குப் பதிலாக பேரழிவுகளையே நோக்க வேண்டியிருக்கிறது.

முஸ்லிம்களாகிய நாம் எமது கலாசார ரீதியில் சிந்தித்து வாழ முற்பட வேண்டும்.

"அல் - ஹாமியா" என்பது பாதுகாவலர்கள் என்று அர்த்தம். இவ் அரபிக் கல்லூரியில் எமது பகுதிகளைச் சேர்ந்த பலர் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் சிறந்த உலமார்களாக வெளியேறி எமது சமூகத்தில் மார்க்க தத்துவத்தை சிறந்த முறையில் வளர்க்கப் பாடுபட வேண்டும்."

இவ்வாறு அவர் கூறினார். (ல-281)

# புதை பொருள் ஆராய்ச்சி

தலைமன்னார், ஜூன் 13

சிக்காக்கோ பல்கலைக் கழக புதை பொருள் ஆராய்ச்சி பேராசிரியர் திரு. ஜோன் காசல் தலைமையில் திருக்கேதீஸ்வரத்தில் புதை பொருள் ஆராய்ச்சி வேலைகள் ஆரம்பமாகியிருக்கின்றன.

இந்த ஆராய்ச்சி தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு நடைபெறும்.

இந்த ஆராய்ச்சி வேலைகளுக்குத் துணையாக, யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. ரகுபதி தலைமையில் 15 மாணவ, மாணவிகளைக் கொண்ட குழுவொன்று பணியாற்றி வருகிறது. (ல-286)

# தியாக உணர்வுடன் செய்வதே ஆசிரிய சேவை

## — மீரா லெவ்வை

வவுணதிவு, ஜூன் 13

சுயநலம் பாராது ஆசிரியர்கள் கடமையில் ஈடுபட வேண்டும். ஆசிரிய சேவை என்பது தியாக உணர்வுடன் செய்வதாகும்.

காத்தான்குடி மீரா மகளிர் வித்தியாலயத்தில் அண்மையில் நடந்த ஆங்கில தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிராம அபிவிருத்தி பிரதி அமைச்சர் டாக்டர் பரீத் மீரா லெவ்வை இவ்வாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் ஜனாப் எம். உதுமான் லெவ்வை தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:-

ஆசிரிய சேவையில் உள்ளவர்கள் தமது கடமையை தியாக மனப்பான்மையுடன் செய்ய வேண்டும். அப்போது தான் நல்லதொரு சமூகத்தை உருவாக்க முடியும்.

இவ் விழாவில் பல அமெரிக்க ஆங்கில ஆசிரிய பயிற்சியாளர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். மொழி மீது கொண்ட பற்றுக் காரணமாக அவர்கள் தங்கள் தாயகத்தை விட்டு பல ஆயிரம் மைல்கள் கடந்து வந்து பணி புரிகிறார்கள்.

ஆனால் எமது ஆசிரியர்களைப் பொறுத்தவரை, தாம் வாழும் சுற்றாடலிலுள்ள பாடசாலைகளைத்தான் விரும்புகின்றார்கள். இதனால் தான் எமது சமுதாயம் பின்தங்கிய நிலையிலிருக்கிறது.

இந்நிலை மாற வேண்டும். தியாக மனப் பான்மையுடன் சேவைபுரிய முன்வர வேண்டும்.

அவ்வாறு அவர் கூறினார்.

இவ் விழாவில் மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளர் ஜனாப் ரி. டி. ஹஸன், தெற்கு வட்டார கல்வி அதிகாரி திரு. சீ. மனோகரன், ஆங்கில கல்வி அதிகாரி திருமதி எஸ். செல்வரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஆங்கில ஆசிரியர் திரு. ஏ. லியோன் நன்றியுரையாற்றினார், (ல-318)

# கோரிக்கையை வென்றெடுக்க சாத்வீக போராட்டம்

## தொண்டர் ஆசிரியர் கூட்டத்தில் உரை

எமது கோரிக்கையை நாம் வென்றெடுக்க வேண்டுமானால், சாத்வீகமான முறையிலேயே எமது போராட்டம் அமைய வேண்டும்.

இவ்வாறு, கிண்ணியா தொண்டர் ஆசிரிய சங்கத் தலைவர் ஜனாப் எம். ஏ. சஹீட் கூறினார்.

சின்னக் கிண்ணியா அல் — அக்ஸா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கிண்ணியா தொண்டர் ஆசிரிய சங்க அங்கத்தவர்களின் ஆர்ப்பாட்டக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:-

தொண்டர் ஆசிரியர்கள் எதுவித ஊதியமுமின்றி நாலைந்து வருடங்களாக பாடசாலைகளில் கடமையாற்றுகிறார்கள். உயர்தர பரீட்சையில் சித்தியெய்திய இவர்கள், நிரந்தர ஆசிரிய நியமனம் கிடைக்கப் பெறாமல் கஷ்டமான வாழ்க்கை நடத்துகின்றனர்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குமாறு கல்வி அமைச்சரைக் கேட்டோம். இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே நமது சங்கத்தை ஒரு பலமான சங்கமாக்கி, அரசாங்கத்திடம் கோரிக்கை எழுப்ப வேண்டும். அத்தோடு ஹட்டன், மஸ்கெலிய போன்ற பகுதிகளில் தொண்டர் ஆசிரியர்கள் மேற்கொண்ட சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் கல்வி அமைச்சருக்கு இது சம்பந்தமாக ஒரு மகஜர் அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டது.

அம் மகஜரில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

* தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.
* ஆசிரிய நியமனம் வழங்கும் போது தொண்டர் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
* நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை ஆதாரப் பணமாக ரூபா முன்னூறுக்கு குறையாத தொகையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* நிரந்தர ஆசிரியர்களுக்கு வழங்குவது போன்று தொண்டர் ஆசிரியர்களுக்கும் பிரயாண சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

இக் கோரிக்கைகள் சங்க உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இக் கூட்டத்தில் உப தலைவர் எம். எஸ். சபறுள்ளா, காரியதரிசி எம். எஸ். முகம்மது றபீக் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். (ல-151)

தினபதி

தொலைபேசி:
23882, 23884, 23864
தந்தி: "தினபதி" கொழும்பு
தபால் பெட்டி இல. 1613
5, குணசேன மாவத்தை,
கொழும்பு — 12.

— 1984 ஜூன் 14 —
சுடர் 17 கதிர் 2701

## புதுவாழ்வு நிலையங்கள்

மதுபானத்துக்கும் மற்றும் போதைப் பொருள் களுக்கும் அடிமையானவர்களை அந்தத் தீய பழக்கத்திலிருந்து விடுவித்து அவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதற்கான நிலையம் ஒன்றை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று முன்தினம் கொழும்பில் திறந்து வைத்தார்.

"மெல் மெதுர" என்று அந்த நிலையத்துக்குப் பெயர்.

"சுமித்ரயோ" என்ற தொண்டர் நிறுவனம் நடத்தும் புது வாழ்வு நிலையம் தான் "மெல் மெதுர".

காலஞ்சென்ற அதி வண. லக்தாஸ டி மெல் நினைவாக அவருடைய பாரியார் அன்பளிப்புச் செய்த பெரிய வீடு ஒன்றில் புதுவாழ்வு நிலையம் திறக்கப்பட்டிருக்கிறது.

புதுவாழ்வு நிலையத்தை ஜனாதிபதி திறந்து வைத்துப் பேசுகையில் அனைவரும் கருத்தூன்றிக் கவனிக்க வேண்டிய பல கருத்துக்களை வெளியிட்டார்.

இந்த நாட்டில் உள்ள மக்களில் சிலர் முன்னர் எல்லாம் அபின், கஞ்சா போன்ற போதைப் பொருள்களை உபயோகித்து வந்தார்கள்.

இப்போது அவர்கள் வெளிநாடுகளில் இருந்து கடத்தி வரப்படும் "ஹெரோயின்", "கொக்கேயின்" போன்ற பயங்கர போதைப் பொருள்களைப் பெருமளவில் உட்கொள்ளத் தொடங்கி விட்டார்கள்.

# ஆத்மாவில் படிந்துள்ள கறைகளை போக்குங்கள்

## பிறரின் இன்ப துன்பங்களில் பங்குகொள்பவனே உண்மை பக்தன்

**— பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா —**

இருள் சூழ்ந்த அறைக்குள் நீ இருக்கும் பொழுது ஒருவர் விளக்கொன்றை கொண்டு வருவாரேயானால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சிதறிக் கிடக்கும் உன் பொருள்களைச் சேகரித்துக் கொள்ள வேண்டும். அல்லது எங்கெங்கே அவை வைக்கப்பட்டுள்ளன என்று பார்த்துக் கொள்ள வேண்டும்; அல்லது வேறு எந்தக் காரியத்திற்கு விளக்குத் தேவையோ அதைச் செய்து கொள்ள வேண்டும்.

அதேபோல, ஆண்டவனே மனித உருவத்தில் உன்னுடைய வாயிற்படிக்கே வந்திருக்கும் போது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு உன்னைப் பெருந் துன்பச் சுழலினின்றும் காப்பாற்றிக் கொள்.

ஐந்து உறைகள் ஆத்மாவை மூடிக் கொண்டு அவற்றின் பெருமை வெளிப்படா வண்ணம் செய்கின்றன. இவற்றைச் சுத்தப் படுத்தி ஒளிருமாறு செய்.

கலப்பில்லாத நல்ல சுத்தமான உணவால் அன்னமய கோசம் சுத்தப்படுத்தப்பட வேண்டும். அமைதியான உள்ள நிலையோடு, நிதான நிலையில் மூச்சைக் கட்டுப்படுத்தி பிராணமய கோசத்தைச் சுத்தப்படுத்து; உணர்ச்சிகளோடு ஒட்டுதலில்லாமலும் மகிழ்ச்சி, துன்பம் இவற்றால் பாதிக்கப்படாமலும் உள்ள புனிதமான எண்ணங்கள் உணர்வுகள் இவற்றால் மனோமய கோசத்தைச் சுத்தப்படுத்து; உண்மைப் பொருளைத் தியானிப்பதன் மூலம் விஞ்ஞானமய கோசத்தையும், கடவுளைக் காணுதலாகிய பேரின்பத்துள் மூழ்குவதன் மூலம் ஆனந்தமய கோசத்தையும் சுத்தப்படுத்து.

உனது கொள்கையைக் கடைப்பிடி. ஏதோ நடந்தது, யாரோ சொன்னார் என்பதற்காக உன்னுடைய விசுவாசத்தை மாற்றாதே. உனக்கு ஏற்படும் முதல் ஏமாற்றத்தால் கசப்படைந்து சாயிபாபாவின் படத்தை எடுத்துவிட்டு வேறொரு படத்தை அங்கே மாட்டாதே.

எல்லாம் அவன் பாரம்; அவன் விதித்தபடி நடக்கட்டும் என்ற நிலையில்தான் நீ இருக்க வேண்டும். எளிய பாதையிலும் கரடு முரடான பாதையிலும் சென்று பார்க்காவிட்டால் எவ்வாறு நீ வலுவடைவாய்?

ஒளி, இருள், வெயில் மழை எல்லாவற்றையும் நீ வரவேற்க வேண்டும். ஏராளமான உபகரணங்களோடு ஒரு படத்தையோ சிலையையோ வழிபடுபவர்கள் தான் பக்தர்கள் என்று நினைத்து விடாதே. யாராயிருந்தாலும் சரி, நீதி நெறியில் நடக்க வேண்டும்; சொல்லுவது போலவே செயலும் இருக்க வேண்டும். கண்ணால் கண்டதையே நாவால் பேச வேண்டும்; பிறர் துன்புறும் போது தானும் வருந்தி, அவர் மகிழ்ச்சி கொள்ளும்போது தானும் மிகுந்த மகிழ்ச்சி கொண்டு இருக்க வேண்டும். இத்தகையவனே பக்தனுவான்-

கூர்த்தமதி, ஆழ்ந்த அறிவு இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டவர் இறைவன். ஏன்; சப்த ரிஷிகளால் கூடக் கடவுள் தத்துவத்தின் மிக உயர்ந்த நுணுக்கத்தைக் கிரகிக்க முடியவில்லை.

### சாயி அமிர்தம்

மாலாஸ்பதி, தாஸ்கனு, முதோல்கர், காகா சாகிப் ஆகியோர் பாபாவின் விளிம்பைத் தான் கண்டார்கள். தாதா ஒரு சிறு கடையை மட்டும் கண்டார். ஆதலால். என்னை ஆழ்ந்து நோக்க முயலாதே. சிரத்தையையும் நம்பிக்கையையும் வளர்த்துப் பிரேமையின் மூலம்சஎன் ஆனந்தத்தைப் பெறு. உன்னால் செய்ய முடிந்தது அது தான். செய்து பயன்பெறு.

பக்கிரி உடையணிந்து புத்தகங்களில் காணப்படும் விஷயங்களைப் பிதற்றித் திரியும் சில்லறை எண்ணங் கொண்டோரை, எல்லாம் நாடாதே. எடை போட்டுச் சோத்த பின்னரே அவற்றைக் கைக்கொள். அவர்களது தினசரி நடத்தை, அவர்களது உள்நோக்கம், விஷயங்களைக் கண்டறியும் முறை, அவர்களது புத்தியின் போக்கு, சொல்லுக்கும் செயலுக்குமுள்ள தொடர்பு இவற்றைக் கண்காணித்துக் கொண்டுவா.

சற்று நேரத்துக்கு முன் செய்தது போல் பஜனையில் நீங்கள் சேரவேண்டுமானால் பிறருடன் ஒத்துப்பாட வேண்டும் அல்லவா?

இல்லாவிடில் உங்கள் குரல் கர்ண கடூரமாய் ஒலிக்கிறது; துன்புறுத்துகிறது. இதே போல் உங்கள் வாழ்வின் இசை ஆண்டவனால் நியமிக்கப்பட்ட திட்ட முறைப்படி நடைபெறவில்லை என்றால் அது இசையின் இனிமையைக் கெடுத்து விடுகிறது.

உறுமல் சத்தமே மிஞ்சும்; அது பிறருக்குத் துன்பமே தரும். ஆதலால் ஆண்டவனின் வழியைப் பின்பற்றி அதாவது பிரம்ம மார்க்கத்தையும், தர்ம மார்க்கத்தையும் தவறாது கடைப்பிடி.

பிறப்பு, இறப்பு ஆகிய இரு கடல்களையும் கடந்து மேலே பறந்து செல்ல இந்த இரண்டு இறக்கைகளும் பயன்படும். (ல)



## சமூகம் சீர்பெற மேல்நாட்டு மோகம் நீங்கவேண்டும்

### மத உபந்நியாசத்தில் உரை

சாவகச்சேரி, ஜூன் 13

"மேல்நாட்டு மோகத்தால் நம் சமூகம் சீரழிந்து கொண்டிருக்கிறது. [illegible]

அவர் அங்கு தொடர்ந்து கூறியதாவது:—

இன்று இந்துக்களிடையே, அந்நிய உடை, உணவு, கலை, [illegible]

## ரமழானை சிறப்பிக்க தவறக்கூடாது

பலாங்கொடை. ஜூன் 13

ஏனைய மாதங்களை விட ரமழான் மாதம் மிகவும் மேலானதாகும். ரமழான் மாதத்திலேதான் புனித குர்ஆன் இறக்கப்பட்டது. எனவே இம்மாதத்தில் நாம் நோன்பு நோற்று நல் அமல்களை செய்து சிறப்பிக்கத் தவறக் கூடாது.

இவ்வாறு பலாங்கொடை [illegible]

# செய்தித் திரட்டு

## சிரமதானம்

மல்வானை, ஜூன் 13

மல்வானை பிரதிபகமையில் இரண்டு நாள் சிரமதானமொன்று நடைபெற்றது.

மல்வானை அல் முபாரக் மத்திய கல்லூரி, மாணவர்கள் அதிபர் எஸ். எம். ஹனீபா தலைமையில் இச் சிரமதானத்தை மேற்கொண்டனர்.

சிரமதானத்தின் மூலம் பாதைகள் அமைத்தல், பூமரங்கள் நாட்டுதல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

அமைச்சர் ரனில் விக்கிரமசிங்கவும் இச்சிரமதானப் பணியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ல)

## திறப்பு விழா

கொழும்பு, ஜூன் 14

புங்குடுதீவு சேர் துரைசுவாமி வித்தியாலய கட்டடத்தின் திறப்பு விழா இன்று 14 ஆம் திகதி மாலை நடைபெறும்.

மேற்படி கட்டடம் புனரமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ல)

## கிளை

பரந்தன், ஜூன் 13

பரந்தன், குமரபுரத்தில் இளைஞர் சேவை மன்றக் கிளை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இளைஞர் சேவை அதிகாரி திரு. கே. பரராச சேகரம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற ஆரம்ப கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர். (ல)

## திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 13

பாடசாலைப் பிள்ளைகளின் பிஸ்கட்டுகளைத் திருடிச் சென்றார்கள் திருடர்கள்.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இந்தத் திருட்டு நடந்தது.

இரவு நேரம் கூரையைப் [illegible]

வெளிநாடுகளில் இருந்து கடத்தி வரப்படும் "ஹெரோயின்", "கொக்கேயின்" போன்ற பயங்கர போதைப் பொருள்களைப் பெருமளவில் உட்கொள்ளத் தொடங்கி விட்டனர்கள்.

போதைப் பொருள்களை வைத்திருத்தல், விற்றல், உபயோகித்தல் ஆகியவை குற்றச் செயல்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குற்றச் செயல்களில் சிலவற்றிற்கு மரண தண்டனை விதிக்கவும் சட்டம் இருக்கிறது.

எனினும் சட்டத்தால் மட்டும் போதைப் பொருள் தீமையை ஒழித்து விட முடியாது.

போதைப் பொருள்களை உபயோகிப்பவர்களுக்கு நல்லறிவு புகட்டி அவர்களைத் திருத்த வேண்டும். போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களில் பலரை புது வாழ்வு நிலையங்களில் வைத்திருந்து உரிய சிகிச்சை அளித்துத்தான் அவர்களை மீண்டும் "மனித"ராக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் அரசாங்கம் தனியாகச் செய்ய முடியாது. தொண்டர் நிறுவனங்களும் சமூக சேவை இயக்கங்களும் இந்தப் பணியில் ஈடுபட வேண்டும். அந்த இயக்கங்களுக்கு அரசாங்கம் முழு ஆதரவு அளிக்கும். வேண்டிய உதவிகளைச் செய்யும்.

இப்படி ஜனாதிபதி தெரிவித்தார். சுமித்ரயோவின் சேவையையும் அவர் பாராட்டினார்.

சுமித்ரயோவைப் போன்ற பல்வேறு தொண்டர் இயக்கங்கள் இன்று நாட்டுக்குத் தேவைப்படுகின்றன.

ஆரம்பத்தில் பலரும் பல்வேறு காரணங்களால் போதைப் பொருள்களை உபயோகிக்கத் தொடங்குகிறார்கள். எல்லோருக்கும் ஒரு கட்டத்தில் தாம் போதைப் பொருள்களை உபயோகிப்பதால் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஏற்படும் தீமை தெரிய வருகிறது.

அந்த நேரத்தில் அவர்கள் போதைப் பொருளில் மேலும் ஒரு டோஸ் எடுத்தால் எல்லாம் மறந்து போகிறது. தொடர்ந்து எடுக்க மனம் தூண்டுகிறது. உடலும் நாட்டம் காட்டுகிறது.

இந்த வகையில் தான் போதைப் பொருள் உபயோகிக்கும் பழக்கம் வளர்கிறது. திருந்த விரும்புபவர்களையும் திருந்த விடாது தன் பிடியை நெருக்குகிறது.

இப்படிப்பட்ட துர்ப்பாக்கியசாலிகள் மீது பரிதாபப்பட வேண்டும். அவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதும் புதியவர்களை ஆரம்பத்திலேயே நல்வழிப் படுத்துவதும் பெரும் புண்ணியம். நாட்டுக்கும் அதனால் பெரும் நன்மை.



மட்டக்களப்பு, கல்லடி முகத்துவாரம் அ. த. க. பாடசாலை அதிபர் திரு. வே. இரத்தினராஜா சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையொட்டி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாராட்டு விழாவொன்றை அண்மையில் நடத்தியது. இவ்விழாவில் மட்/மாநகர சபை ஆணையாளர் திரு. பெனடிற் தார்சிசியஸ் அதிபரை பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காண்க. (ல-318)
[படம்: இரா. உதயகுமார்]

# பனஞ் சீனியைப் பாவிப்பதால் அந்நிய செலாவணி மீதமாகும்

## திறப்பு விழாவில் கருத்து

பளை, ஜூன் 13

நாட்டில் பனஞ் சீனியைப் பாவிப்பதன் மூலம் அந்நியச் செலாவணியை மீதப்படுத்தலாம்.

யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ச. வேலாயுதம்பிள்ளை இவ்வாறு கூறினார்.

பளையில் பச்சிலைப் பள்ளி தெங்கு பனம் பொருள் உற்பத்திச் சங்கத்தினால் 3½ லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பனஞ் சீனித் தொழிற்சாலையை அண்மையில் திறந்து வைத்து அவர் உரையாற்றினார்.

இவ்விழா பச்சிலைப் பள்ளி தெங்கு பனம் பொருள் உற்பத்திச் சங்க பொது முகாமையாளர் திரு. கே. தம்பிராசா தலைமையில் நடைபெற்றது.

திரு. ச. வேலாயுதம்பிள்ளை அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

"மக்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் சீனிக்குப் பதிலாக பனஞ் சீனியை உபயோகிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

பனஞ் சீனி தேக ஆரோக்கியத்திற்கும் சிறந்ததென கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறான தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதன் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பனை வளத்தை தகுந்த முறையில் பயன்படுத்த வாய்ப்புண்டு.

சீவல் தொழிலாளர்களும் இதனால் பயனடைவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

பளை உதவி அரசாங்க அதிபர் திரு. சு. முருகவேல், பனம் பொருள் அபிவிருத்திச் சங்க அதிகாரி திரு. கே. தங்கவேலு, ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள். (ல-239)

## மத உபந்நியாசத்தில் உரை

சாவகச்சேரி, ஜூன் 13

"மேல்நாட்டு மோகத்தால் நம் சமூகம் சீரழிந்து கொண்டிருக்கிறது. சமூகம் சீர்பெற இந்த மோகம் நம்மை விட்டு நீங்க வேண்டும்."

இவ்வாறு ஆசிரிய மணி இளைப்பாறிய அதிபர் திரு. ஆர். டி. சுப்பிரமணியம் கூறினார்.

அண்மையில் நடந்த மட்டுவில் வடக்கு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த உற்சவத்தில் 5 ஆம் திருவிழாவன்று அவர் மத உபந்நியாசம் செய்தார். இந்த உபந்நியாசத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியதாவது:—

இன்று இந்துக்களிடையே, அந்நிய உடை, உணவு, கலை, கலாசார மோகம் பரவி விட்டது.

"சர்வமும் அந்நிய நாகரீகம்" என்றாகி விட்டது.

இந்த நிலையில் ஆறுமுகநாவலர் ஐயாவைப் பற்றி, அவரின் போதனைகளைப் பற்றி சிந்திக்க எங்கே நேரமிருக்கிறது.

அஷ்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள், சைவத்தின் பாரம்பரிய முறைகள் தான். ஆனால், நாகரீக உடைகளுடன் ஆலய தரிசனம் செய்ய வந்தால் இந்த முறைகளை எப்படிக் கடைப்பிடிக்க முடியும்?

நாம் எமது பண்டைப் பாரம்பரியங்களையும் சைவ வழிபாட்டு முறைகளையும் மறந்து, வழி தவறி, அந்நிய நாட்டுப் பாணியில் செல்வது வெறுக்கத்தக்க விடயம்.

சைவர்கள், சைவசமய சம்பிரதாயங்களுக்குத் திரும்பி வர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். (ல-51)

மாதத்திலேதான் புனித குர்ஆன் இறக்கப்பட்டது. எனவே இம்மாதத்தில் நாம் நோன்பு நோற்று நல் அமல்களை செய்து சிறப்பிக்கத் தவறக் கூடாது.

இவ்வாறு பலாங்கொடை ஜும்மாப்பள்ளிவாசலில் நடைபெற்ற குத்பா பிரசங்கத்தின் போது பேஷ் இமாம் அல்ஹாஜ் என். எல். அப்துஸ் ஸலாம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

"ஒவ்வொரு முஸ்லிம்களும் தங்களது இச்சைகளை அடக்கி இம் மாதத்தில் நோன்பினை நோற்று நல் அமல்களை செய்ய வேண்டும். பள்ளிவாசல்களில் தரித்திருந்து இபாதத் செய்ய வேண்டும். ஏனைய மாதங்களை விட மேலான இம் மாதத்தை நாம் அழகு படுத்த முயல வேண்டும்" என்றார். (ல-38)

# குழந்தை யாருக்கு எனும்பிரச்சினையில் தாய்மைவென்றது

தலைமன்னார், ஜூன் 13

குழந்தை தாயிற்கா அல்லது பாட்டிக்கா சொந்தம் என்னும் பிரச்சினை பொலீஸ் நிலையம் வரை சென்றது. பின்னர் அது தாயிடமே ஒப்படைக்கப்பட்டது.

இந்த ருசிகரமான சம்பவம் தலைமன்னார் பியர் பகுதியில் நடைபெற்றது.

இது பற்றி தெரிய வருவதாவது:—

தலைமன்னார் துறை கடற்கரைப் பகுதியில் நீர்கொழும்பைச் சேர்ந்த ஒரு தம்பதியர் இருந்தார்கள். இவர்களுக்கு ஒரு குழந்தை இருந்தது.

இவ்வாறிருக்கையில் மனைவிக்கு வேறொரு ஆடவனுடன் தொடர்பு ஏற்பட்டதாம். அதன் பின் அவர் கணவனையும், குழந்தையையும் விட்டு விட்டு காதலனுடன் ஓடி விட்டாராம்.

குழந்தையை கணவனின் தாய், அதாவது குழந்தையின் பாட்டி தான் வளர்த்து வந்தாராம்.

தற்போது குழந்தைக்கு மூன்று வயதாகின்றது.

அண்மையில் குழந்தையின் தாய் தலைமன்னார் பகுதிக்கு வந்திருக்கிறார். குழந்தைப் பாசம் ஏற்பட்டு கணவனின் தாயாரிடம் போய் குழந்தையைக் கேட்டாராம்.

அவர் குழந்தையைக் கொடுக்க மறுக்கவே பிரச்சினை வளர்ந்து பொலீஸ் நிலையம் வரை சென்று விட்டது.

இந்த சிக்கலான பிரச்சினையை தலைமன்னார் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. கே. அரசரத்தினம் தீர்த்து வைத்தார்.

குழந்தையை ஓரிடத்தில் இருக்க வைத்து குழந்தையின் பாட்டியிடமும், தாயிடமும் ஒவ்வொருவராகக் குழந்தையின் பெயரைச் சொல்லி அழைக்கும்படி சொன்னார்.

பாட்டி முதலில் குழந்தையின் பெயரைச் சொல்லி அழைத்தார். ஆனால் குழந்தை அவரிடம் செல்லவில்லை.

பின்னர் தாய் அழைக்க குழந்தை அவரிடம் சென்றது. அதன் பின்னர் குழந்தை தாயிடமே ஒப்படைக்கப்பட்டது.

களின் பிஸ்கட்டுகளைத் திருடிச் சென்றுர்கள் திருடர்கள்.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இந்தத் திருட்டு நடந்தது.

இரவு நேரம் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் அங்கு பிள்ளைகளுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்த பிஸ்கட்டுகள் அடங்கிய பெட்டிகளைத் திருடிச் சென்றனராம். (ல)

## யுவதி தற்கொலை

மாத்தறை, ஜூன் 13

மூத்த சகோதரியின் வீட்டுக்குப் போவதைப் பெற்றோர் தடுத்ததால் மனமுடைந்த யுவதி ஒருவர் கிருமிநாசனி அருந்தி தற்கொலை செய்து கொண்டாராம்.

இக்கபல்லம என்ற இடத்தைச் சேர்ந்த கே. கே. ஜயந்தி (20 வயது) என்பவரே இவ்வாறு மரணமானார்.

திஸ்ஸமகராமை சடுதி மரண விசாரணை அதிகாரி தற்கொலையென தீர்ப்பளித்தார். (ல)

## தூதுக்குழு

புங்குடுதீவு, ஜூன் 13

புங்குடுதீவு இராசராசேஸ்வரி வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை பற்றி பிரஸ்தாபித்த பெற்றோர் தூதுக் குழுவொன்று யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளையைச் சந்தித்தது.

வித்தியாலய அதிபர் திரு. கா. சு. பொன்னம்பலம் தலைமையில் இத் தூதுக்குழுவினர் அண்மையில் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் கல்விப் பணிப்பாளரைச் சந்தித்தனர்.

மேற்படி வித்தியாலயத்தில் நிலவும் குறைபாட்டைப் போக்குவதற்கு ஆவன செய்வதாகத் திரு. சிமியாம்பிள்ளை தூதுக்குழுவினரிடம் தெரிவித்தார். (ல-240)

## முடிவு திகதி

கிண்ணியா, ஜூன் 13

கிண்ணியா, தம்பலகமம், கந்தளாய் பிரதேசங்களில் தெங்கு செய்கையை மானிய அடிப்படையில் மேற்கொள்வதற்காக விண்ணப்பிக்கும் முடிவு திகதி நாளை 15 ஆம் திகதியாகும்.

இதற்கான, விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் இப்பகுதி தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

இத்தகவலை மேற்படி உத்தியோகத்தர் திரு. வே. யோகராசா தெரிவித்தார்.

# புனித ரமழான் சிந்தனைகள்

வாழ்க்கையில் வெற்றியடைவதற்கு இரண்டு முக்கிய குணாதிசயங்களை மனிதன் பெற்றிருத்தல் வேண்டும். பொறுமையும், விடா முயற்சியுமே அவை.

இந்த இரு குணாதிசயங்களும் இல்லாத எவரும் உலகத்தில் வெற்றி கண்டதாக நாம் கேள்வியுற்றதில்லை. இத்தகைய பொறுமையையும், விடாமுயற்சியையும், சகிப்புத் தன்மையையும் தான் இந்த நோன்பு நமக்கு கற்பிக்கின்றது.

துன்பங்கள் வரும்போது மனிதன் துயரத்தில் ஆழ்ந்து விடக் கூடாது. அவ்வாறே உலக வாழ்வின் இன்பங்களைக் கண்டு அவன் தனது இதயத்தை இழந்து விடக் கூடாது.

இந்த வகையில் மனிதப் பண்பாட்டை வளர்த்து, அவனுடைய வெற்றிக்கும் வாழ்வுக்கும் நோன்பு உதவி புரிகின்றது.

இத்தகைய மகத்தான சாதனைகளுக்கு மனிதனை பக்குவப் படுத்துவது மட்டும் இஸ்லாமிய நோன்பின் இலட்சியமல்ல. பொது நலத்திற்கும், இஸ்லாம் இருக்க வேண்டும் என்றும் இஸ்லாம் விரும்புகிறது.

தன்னுடைய சுக துக்கங்களை, சகோதர மனிதர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பண்பாடு உடையவனாக மனிதன் இருக்க வேண்டுமானால், அவன் ஏழையின் பசிப்பிணியை உணர்ந்திருக்க வேண்டும். இஸ்லாமிய முறையில் நோன்பிருக்கும் எவரும் இதனை எளிதில் உணர்ந்து கொள்ள முடியும்.

இன்றைய அவசர தேவையாகிய ஏழைகளே இல்லாத சமதர்ம சமுதாயத்தை சமைப்பதற்கு இத்தகைய இஸ்லாமிய நோன்பிருக்கும் ஏந்தல்களையன்றி வேறு யாரை நாம் எதிர்பார்க்க முடியும்?

ஏழைகளின் கஷ்டத்தையும் கண்ணீரையும் பற்றி எத்தனை ஆயிரம் சொற்பொழிவுகளை நிகழ்த்தினாலும், எத்தனை நூல்களை எழுதினாலும் பணக்காரர்களின் இதயங்களை இலேசாகத் தொட்டுப் பார்க்கத்தான் முடியுமா?

முக்கிய கடமைகளில் ஒன்றாக இந்த நோன்பு அல்லாஹு வால் விதியாக்கப்பட்டுள்ளது.

"வெளிப்படையாக இக் கடமையை கஷ்டப்பட்டு நிறைவேற்றி விடுவதால் மட்டும் பயனில்லை. இதனால் மனித இதயத்தின் ஆழத்திலே ஏற்படக்கூடிய மாறுதல்களே முக்கியம்" என்று இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

தீய எண்ணங்கள், செயல்களிலிருந்து மனிதன் விடுதலை பெறுகின்றானா? இல்லையா? என்பதில் தான் இந்த நோன்பின் வெற்றியும். தோல்வியும் அமைந்திருக்கிறது.

எமது சிந்தையும் செயலும் மட்டரகமான காலங்களில் இறங்கி, மற்றவர்களுக்குத் துன்பம் விளைவிக்காமல் இருக்கிறதா?

மனிதர்களிடையே பகைமையையும், துவேஷத்தையும் வளர்ப்பதில் நமது சொல்லும் செயலும் நம்மை அறிந்தோ, அறியாமலோ ஈடுபடாமல் இருக்கின்றனவா? முதுகுக்குப்பின் ஒளிந்திருந்து மற்றவர்களை தாக்காமல் இருக்கின்றோமா? சகோதர முஸ்லிம்களின் சுக துக்கங்களில் பங்கு பெறும் பண்பாடு நம் இதயத்திலே இடம் பெற்றிருக்கின்றதா?

இத்தகைய கேள்விகளுக்கு நாம் அளிக்கக் கூடிய பதிலில் தான் எமது நோன்பின் வெற்றியும் தோல்வியும் அமைந்திருக்கிறது என்பதை ரமழான் சிந்தனையாகக் கொண்டு செயல்படுவோம். அதன் மூலம் அல்லாஹ்வின் நல்லருளைப் பெறுவோம்.!!! (11)

### கருத்தடை

புதுடில்லி, ஜூன் 13

இந்தியாவில் கடந்த வருடம் சுமார் 44 லட்சத்து 9 ஆயிரம் பேர் கருத்தடை செய்து கொண்டார்கள்.

அரசின் இலக்கைப் பார்க்கிலும் சுமார் 14 லட்சம் பேர் குறைவாகவே கருத்தடை செய்திருக்கின்றனர்.

இந்தியாவில் உள்ள மொத்தம் 70 கோடி மக்களில் சுமார் 59 லட்சம் பேருக்கு கருத்தடை செய்வதென்று அதிகாரிகள் திட்டமிட்டிருந்தனர்கள்.

(ண)

# சீனாவுடன் ஆயுதபரிவர்த்தனை அதிகரிக்க அமெ. யோசனை

வாஷிங்டன், ஜூன் 13

சீனாவுடன் ஆயுதப் பரிவர்த்தனை உறவுகளை மேம்படுத்திக் கொள்வது பற்றி அமெரிக்கா தற்போது ஆராய்ந்து வருகிறது. அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் இதனை நேற்றுத் தெரிவித்தார்கள்.

சுவீடனும் யூகோஸ்லாவியாவும் அமெரிக்காவுடன் ஆயுதப் பரிவர்த்தனை உறவுகளைக் கொண்டிருக்கின்றன.

இதேபோன்ற உறவை சீனாவுடன் ஏற்படுத்திக் கொள்வது பற்றியே அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது.

சீனப் பாதுகாப்பு அமைச்சர் சாங் ஐபிங் தற்போது அமெரிக்காவில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்.

அவர் அமெரிக்கத் தலைவர்களுடன் கடந்த திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் பேச்சுவார்த்தை நடத்தினார். அதனையடுத்தே சீனாவுக்கு கூடுதல் ஆயுதங்களை விற்பனை செய்வதற்கான புதிய உறவுகளுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

உறவுகளை மேம்படுத்துவதன் மூலம் சீனாவுக்கு அதி நவீன ஆயுதங்கள் வழங்கப்படமாட்டா என்றும், ஆயினும் நடவடிக்கைகளைத் துரிதப் படுத்த இது உதவும் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

இந்தப் பேச்சு வார்த்தைகள் முன்னரைப் போல கனிஷ்ட அதிகாரிகள் மூலமே நடத்தப்படும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

சீனப் பாதுகாப்பு அமைச்சர் சாங் நேற்று முன்தினம் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் காஸ்பர் வெயின் பேர்கரைச் சந்தித்தார்.

அவர் நேற்று அமெரிக்க ஜனாதிபதி றேகனையும், வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ஸையும் சந்தித்து டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள், நவீன வெடி மருந்துகள், ஆகாயப் பாதுகாப்பு ஏவுகணைகள் ஆகியனவற்றின் கொள்வனவு பற்றிப் பேச ஏற்பாடாகி இருந்தது.

(ண)

## துருக்கி குடும்பம் வெளியேற்றம்

மூனிச், ஜூன் 13

தென் ஜெர்மன் எல்லையில் இருந்து ஐந்து துருக்கி நாட்டவர்கள் நாடு கடத்தப்பட்டார்கள்.

அவர்கள் ஜெர்மனியில் அரசியல் புகலிடம் கோரியிருந்த போதிலும் நாடு கடத்தப்பட்டார்கள் என்று கூறி எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி கண்டனம் தெரிவித்திருக்கிறது.

நாடு கடத்தப்பட்ட ஐவரில் இருவர் கணவன் மனைவியர், மூன்றுமவர் சின்னஞ் சிறு குழந்தை, இருவர் இளைஞர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

துருக்கியில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று சமூக ஜனநாயகக் கட்சி எம்.பியான கிளாசன் குற்றம் சாட்டினார்.

(ண)

## புகை பிடித்த பொப் பாடகி



சமீபத்தில் லண்டனில் வானொலி விருது வழங்கும் வைபவம் ஒன்று நடைபெற்றது. அந்த வைபவத்தில் இளவரசி மார்க்கரட்டும் கலந்து கொண்டார். அப்போது இந்த சுவாரஸ்யமான சம்பவம் நிகழ்ந்தது. இளவரசி மார்க்கரட் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தார். வானொலிப் பரிசைப் பெற வந்திருந்த பொப் பாடகி சுசீ மாதிலுக்கு இதைக் கண்டதும் புகை விட வேண்டும் என்ற அவா ஏற்பட்டது. நேராக இளவரசியிடம் சென்று சிகரெட் ஒன்றைக் கேட்டார். இளவரசி முகத்தைச் சுழிக்கவில்லை. தனது கைப்பையை எடுத்து சிகரெட் பாக்கெட்டை வெளியே நீட்டினார். சிகரெட்டை உருவி எடுத்த பொப் பாடகிக்கு இப்போது கூடுதல் துணிச்சல் வந்து விட்டது. தனது சிகரெட்டைப் பற்ற வைக்க இளவரசியின் லைட்டரையும் பயன்படுத்திக் கொண்டார். இதனைப் படத்தில் காண்கிறீர்கள்.

(ண)

## அபின் பாவனைக்கு தடை விதிப்பு

டாக்கா, ஜூன் 13

வங்காள தேசத்தில் ஜூலை மாதம் முதல் அபின் பாவனை தடை செய்யப்படும். 1985 ஆம் ஆண்டு முதல் ஹாசிஸ் போதைப் பொருளுக்கும் தடை விதிக்கப்படும்.

(ண)

# சீக்கிய துருப்புகள் கிளர்ச்சி கவலைதரும் பிரச்சினை அல்ல:

## பிரிட்டிஷ் டெலிவிஷனில் நரசிம்மராவ்

லண்டன், ஜூன் 13

இந்திய இராணுவத்தில் உள்ள சீக்கிய அதிருப்தியாளர்களின் கிளர்ச்சி கவலை தரும் பிரச்சினை அல்ல.

இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் நேற்றுக் கூறினார். அவர் பிரிட்டிஷ் வர்த்தக டெலிவிஷனுக்கு பேட்டி அளித்தபோதே மேற்கண்டவாறு சொன்னார்.

[illegible]

யாளர்கள் கிளர்ச்சி நடத்தியதற்குக் காரணமாகும்.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் தற்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இராணுவத்தில் சீக்கிய அதிருப்தியாளர்களின் கிளர்ச்சி தொடர்ந்து கவலையைத் தராது.

புனிதநகர் அமிர்தசரஸில்

தேடிக் கண்டுபிடிக்கும் இராணுவ நடவடிக்கை இன்னமும் தொடர்கிறது.

இந்த நடவடிக்கை இன்னும் சில நாட்கள் நீடிக்கும். அரசியல் கோரிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகள் மீண்டும் மாமூல் நிலைமை ஏற்பட்ட பின்னர் மட்டுமே ஆரம்பிக்கப்படும்.

ஹஜ் யாத்திரைக்காக

# 1½ லட்சம் ஈரானியர்கள் சவூதிக்கு செல்ல அனுமதி

ஜெத்தா, ஜூன் 13

இவ் வருட ஹஜ் யாத்திரைக்காக சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஈரானியர்களை அனுமதிப்பதற்கு சவூதி அரேபியா இணக்கம் தெரிவித்திருக்கிறது.

"சவூதி அரேபிய செய்திப் பத்திரிகையான "அல் – நட்வா" இச் செய்தியை நேற்று வெளியிட்டது.

சவூதி அரேபிய செய்திப் பத்திரிகையான "அல் – நட்வா" இச் செய்தியை நேற்று வெளியிட்டது.

முஸ்லிம்களின் புனித ஸ்தலங்களான மெதினாவினதும், மக்கத்தினதும் காவலனாக சவூதி அரேபியா இருந்து வருகிறது.

## சவூதிக்கு செல்ல அனுமதி

ஈரானின் கோரிக்கையை அடுத்தே ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஈரானிய ஹஜ் யாத்திரிகர்களை அனுமதிப்பதற்கு சவூதி அரேபியா இணக்கம் தெரிவித்திருக்கிறதென்று பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த வருடம் ஈரான், சவூதி அரேபிய பாதுகாப்புப் படையினர் மீது குற்றச்சாட்டுத் தெரிவித்திருந்தது.

ஈரானிய ஹஜ் யாத்திரிகர்கள் மதீனாவில் தமது ஹஜ் கடமைக்காக கூட்டங்களை நடத்திய போது சவூதி அரேபிய ஆயுதப் படையினர் ஈரானியருக்கு எதிராகக் கொடூரமாக நடந்து கொண்டார்கள் என்று அந்தக் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

சுன்னி முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருக்கும் சவூதி அரேபியா, ஷியா முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருக்கும் ஈரானியர் மீது பதிலுக்குக் குற்றம் சாட்டியது.

ஈரானியர்கள் ஹஜ் யாத்திரையை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிறார்கள் என்றும், குழப்பத்தை உண்டுபண்ணுகிறார்கள் என்றும் சவூதி அரேபியா தெரிவித்திருந்தது.

ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த இரு நாட்டு உறவுகளும் கடந்த வாரம் மோசமாகின.

பாரசீகத்தின் மீதாகப் பறந்து சென்ற ஈரானிய வேட்டை விமானம் ஒன்றை சவூதி அரேபியா சுட்டு வீழ்த்தியதை அடுத்தே உறவு மேலும் பாதிக்கப்பட்டது.

(ண)

...கண்டவாறு சொன்னார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இராணுவத்தில் உள்ள சீக்கிய அதிருப்தியாளர்களுக்கும், அரச விசுவாச துருப்புகளுக்கும் இடையே நடைபெற்ற மோதல்களில் 13 சீக்கிய அதிருப்தியாளர்கள் கொல்லப்பட்டார்கள்.

புனித நகர் அமிர்தசரஸில் உள்ள சீக்கிய பொற் கோயிலை இராணுவத்தினர் முற்றுகையிட்ட சம்பவத்தை அடுத்து இராணுவத்தில் உள்ள சீக்கிய அதிருப்தியாளர்கள் வெளியேறினார்கள் என்பதை வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவ் ஒப்புக் கொண்டார்.

வெளியுறவு அமைச்சர் தொடர்ந்து பேட்டியில் கூறியதாவது:—

தீய நோக்கம் கொண்ட சக்திகளினால் பரப்பப்பட்ட சில பொய்யான பிரசாரமே இராணுவத்தில் சீக்கிய அதிருப்தி...

...தராது.

புனிதநகர் அமிர்தசரஸில் உள்ள பொற் கோயிலிலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் சீக்கியத் தீவிரவாதிகளைத்...

...படும்.

இப்படி வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவ் தமது பேட்டியில் கூறியிருக்கிறார்.

(ண)

பிரிட்டனில்

## கள்ளக் காதல் குழந்தைகள் பிறப்பு விகிதம் அதிகரிப்பு

லண்டன், ஜூன் 13

பிரிட்டனில் கடந்த வருடம் பிறந்த குழந்தைகளில் ஆறில் ஒரு பகுதி குழந்தைகள் கள்ளக் காதலர்களுக்குப் பிறந்தனவாகும்.

சனத்தொகை கணக்கெடுப்புத் திணைக்களத்தினால் நேற்று வெளியிடப்பட்ட புள்ளி விவரங்களில் இருந்து இத் தகவல் தெரிய வந்திருக்கிறது.

1983 இல் இவ்வாறு 16 சதவீத குழந்தைகள் பிறந்திருக்கின்றன. 1982 இல் 10 சதவீத குழந்தைகளே இவ்வாறு கள்ளக் காதலர்களுக்குப் பிறந்தன.

கடந்த வருடம் கள்ளக் காதலர்களுக்குப் பிறந்த குழந்தைகளில் மூன்றில் இரண்டு பகுதி குழந்தைகளின் தாய்மார் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர்.

இப்படி அந்த புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பெண்கள் மத்தியில் மாறி வரும் மனப்பான்மையையே இந்தப் புள்ளி விவரங்கள் பிரதிபலிக்கின்றன என்று குடும்ப தேசிய சபை கருத்து வெளியிட்டிருக்கிறது. அது கூறியிருப்பதாவது:—

திருமணம் செய்ய அவதிப்படுவது தவறாகும் என்று இளம் தாய்மார் கருதுகிறார்கள்.

வயது முதிர்ந்த தாய்மாரே சுதந்திர மனப்போக்குக் கொண்டவர்கள். ஒரு குழந்தையை தம்மால் தனித்தே வளர்த்து விட முடியும் என்றும் அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

இப்படி அந்தச் சபை கருத்து வெளியிட்டிருக்கிறது.

(ண)

## இந்தியாவை சீர்குலைக்க வெளிநாடுகள் முயற்சி

### பிரதமர் இந்திரா குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூன் 13

இந்தியாவை சின்னாபின்னப்படுத்தும் முயற்சியில் சில வெளிநாடுகள் இறங்கி இருக்கின்றன.

இப்படி இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்றுக் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:—

கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை சில வெளிநாட்டுச் சக்திகள் பஞ்சாப்பிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் குழப்பத்தை தூண்டி விட்டன.

பெயர் குறிப்பிடப்படாத நாடுகள் சில இந்தியாவில் சீர்குலைவை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டை நிலைகுலைய வைக்க முயன்று வருகின்றன.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அறிக்கை பாகிஸ்தானுக்கு எதிராகவே விடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

பஞ்சாப்பில் உள்ள சீக்கியத் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆயுதங்களை வழங்கி வருகின்றதென்று இந்திய இராணுவ அதிகாரிகளும், அரசியல் தலைவர்களும் சமீபத்தில் குற்றம் சாட்டி வந்தார்கள்.

இந்திய எல்லைப்புறத்தில் பாகிஸ்தான் தனது படைபலத்தை அதிகரித்து வருகிறதென்று இராணுவ அதிகாரிகளும், ஆளும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் கடந்த சில மாத காலமாக குற்றம் சாட்டி வந்தார்கள் என்பதும் நினைவிருக்கலாம்.

(ண)

## அ.மெ. உதவி ஜனாதிபதியின் இல்லத்திற்கு வெளியே இருவர் கைதானார்கள்

வாஷிங்டன், ஜூன் 13

அமெரிக்க உதவி ஜனாதிபதி ஜோர்ஜ் புஷின் இல்லத்துக்கு வெளியே போலித் துப்பாக்கியுடன் சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்பட்ட இரண்டு நபர்களை இரகசியப் பொலீஸார் கைது செய்தார்கள்.

நேற்றிரவு இச் சம்பவம் நிகழ்ந்தது. உதவி ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், தமது 60 ஆவது வருட பிறந்த தினத்தைக் கொண்டாடிய போதே இச் சம்பவம் நடைபெற்றது.

பிறந்த தின வைபவத்தில் ஜனாதிபதி ரொனல்ட் றேகனும் கலந்து கொண்டார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது:—

உதவி ஜனாதிபதி ஜோர்ஜ் புஷின் பிறந்த தின வைபவம் தடபுடலாக நடந்து கொண்டிருந்தது.

அந்த வைபவத்தில் ஜனாதிபதி றேகனும் கலந்து கொண்டார்.

அப்போது உதவி ஜனாதிபதி ஜோர்ஜ் புஷின் இல்லத்தைச் சூழவுள்ள வேலியோரமாக இரண்டுபேர் சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்பட்டார்கள்.

அவர்கள் பேப்பர் பை ஒன்றை வைத்திருந்தார்கள். இரகசியப் பொலீஸ் அதிகாரி ஒருவர் அவர்களை அணுகினார். பையில் இருப்பது என்ன என்றும் கேட்டார்.

சந்தேக நபர்கள் இருவரும் பையில் இருப்பது என்ன என்பதைக் கூற மறுத்து விட்டார்கள்.

பையில் போலித் துப்பாக்கி ஒன்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதனை அடுத்து இருவரும் கைது செய்யப்பட்டார்கள்.

இச் சம்பவம் பற்றி ஜனாதிபதி றேகன் வெள்ளை மாளிகையில் வைத்தே அறிந்து கொண்டார். அதுவரை இது பற்றி அவருக்கு எதுவுமே தெரியாதென்று வெள்ளை மாளிகைப் பேச்சாளரான மார்லின் பிட்ஸ்வாட்டர் சொன்னார்.

(ண)

## றேகனின் நண்பருடைய வைப்பாட்டி கொலை வழக்கு

லொஸ் ஏஞ்ஜல்ஸ், ஜூன் 13

ஜனாதிபதி றேகனின் நண்பரான கோடீஸ்வரர் அல்பிரட் புளூமிங்டேலின் வைப்பாட்டியும் முன்னாள் "மாடல்" அழகியுமான விக்கி மோர்கன் கொலை செய்யப்பட்ட போது புத்தகம் ஒன்றை எழுதிக் கொண்டிருந்தார் என்றும், அதில் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளின் பெயர்கள் குறிப்பிட்டிருந்தன என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

கொலை வழக்கில் சாட்சியமளித்த சரோன் போர்டா எதிர்த் தரப்பு வக்கில் சார்ள்ஸ் மத்தியூவின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு சொன்னார்.

புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தவை கூறப்படும் எட்வின் மீஸ் ஜனாதிபதியின் ஆலோசகரானார். அரசாங்க அதிகாரிகளைப் பற்றி என்ன எழுதப்பட்டிருந்தது என்பதை சாட்சி குறிப்பிடவில்லை.

மாடல் அழகி மோர்கனின் தாயான பிரிட்டிஷ் பெண்மணி ஜோனி லெனேயின் தோழியான போர்டோ இந்த வழக்கில் நேற்று இரண்டாவது நாளாக சாட்சியம் அளித்தார்.

இவ்வழக்கில் முன்னாள் எழுதுவினைஞரான மார்வின் பான்கோஸ்ட், கடந்த ஜூலை மாதத்தில் பேஸ்போல் மட்டையொன்றால் மோர்கனை அடித்துக் கொன்றார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மெலிந்த உருவத்தையும் கறுத்த தலைமயிரையும் கொண்ட மோர்கன் 1982 இல் 100 லட்சம் டாலர் ஜீவனாம்சம் கோரி புளூமிங்டேல் மீதும் அவர் மனைவி பெட்ஸி மேலும் வழக்குத் தொடுத்திருந்தார். 12 வருடங்களாக தன்னுடன் தொடர்பு வைத்திருந்த புளூமிங்டேல் தன்னை ஆயுள் முழுதும் வைத்துக் காப்பாற்றுவதாக வாக்களித்திருந்தார் என மோர்கன் குறிப்பிட்டிருந்தார்.

மோர்கன் கொலை வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நாட்களில் புளூமிங்டேல் மரணமானார். கோரிக்கையின் ஒரு பகுதியான 100 லட்சம் டாலர்களை மேல் நீதிமன்றமொன்று நிராகரித்தது.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும், அந்தரங்கத் தரம் கொண்ட இரு அதிகாரிகளும் உட்பட புளூமிங்டேல், மோர்கன், மற்றும் பலர் சம்பந்தப்பட்ட பாலியல் படங்களைப் பார்த்ததாக வழக்கறிஞர் ரொபர்ட் ஸ்டேயின் பேர்க் கூறியிருந்தார். பின்னர் இப் படங்கள் களவாடப்பட்டதாக அவர் அறிவித்திருந்தார்.

மோர்கனும், கோர்டன் பெஸிசிஸ் எனும் பெயருடைய வேறொரு எழுத்தாளரும் சேர்ந்து "அல்பிரட்டின் வைப்பாட்டி" என்ற புத்தகத்தை எழுதி வருவதாக லேனி தமக்குச் சொன்னதாக போர்டோ கூறினார்.

(ண—ரு)

### துப்பாக்கி சண்டை

லுஸாக்கா, ஜூன் 13

ஸம்பியாத் துருப்புகளும், ஸயரே துருப்புகளும் கடந்த திங்கட்கிழமை பல மணி நேரம் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டன.

(ண)

## சீக்கிய கிளர்ச்சி வீரர்கள் 50 பேர் மாண்டார்கள்

புதுடில்லி, ஜூன் 13

இராணுவத்தில் உள்ள சீக்கிய அதிருப்தியாளர்களில் சுமார் 50 பேர் கொல்லப்பட்டார்கள். இராணுவத்திலிருந்து கட்டுப்பாடுகளை மீறிப் புறப்பட்டுச் சென்று கலவரத்தில் ஈடுபட முயன்றபோதே இவர்கள் கொல்லப்பட்டார்கள்.

இராணுவத்திலிருந்து கட்டுப்பாடுகளை மீறிச் சென்றார்கள் என்று கூறப்படும் பல நூற்றுக் கணக்கான சீக்கிய வீரர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

பல்வேறு வட்டாரங்களில் இருந்து திங்கட்கிழமை வரை கிடைத்த தகவல்களில் இருந்தே இந்த விவரம் தெரிய வந்திருக்கிறது.

கடந்த 10 நாட்களிலும் சுமார் 717 சீக்கியத் தீவிரவாதிகள் பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்கள்.


கடந்த புதன்கிழமை புனித நகர் அமிர்தசரஸில் உள்ள பொற் கோயிலில் இராணுவத்தினர் முற்றுகையிட்டார்கள் அல்லவா? அதன் பின்னரே இத்தனை சீக்கியத் தீவிரவாதிகளும் கைது செய்யப்பட்டார்கள்.

பொற் கோயிலில் இராணுவத்தினர் தேடுதல் நடத்திய போது சுமார் ஒரு லட்சம் டாலர் பெறுமதியான வெளிநாட்டு கரன்சி நோட்டுக்கள் கண்டு எடுக்கப்பட்டன என்று ஏஜன்சி செய்தி தெரிவித்தது.

பொற் கோயிலை இராணுவத்தினர் முற்றுகையிடுவதற்கு முன்னதாக சீக்கியத் தீவிரவாதிகளினால் மறைத்து வைக்கப்பட்டதாகக் கூறப்படும் வைரங்கள் நிறைந்த பெட்டி ஒன்றையும் ஆயுதப் படையினர் கண்டு பிடித்தார்கள்.

(ண)

# சுற்றுலா நீதிமன்ற கட்டடத்தின் அவலம்



வாழைச்சேனையில் சுற்றுலா நீதிமன்றமொன்றை அமைக்க 1979ஆம் ஆண்டில் அடிக்கல் நடப்பட்டது. உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் நீதி அமைச்சராக இருந்த போதே அடிக்கல் நடுகை வைபவம் நடைபெற்றது.

1979இல் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1984 வரை ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன. ஆனால், இன்றுவரை இடைநடுவில் நிறுத்தப்பட்ட கட்டடம் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது.

கட்டடத்தின் தோற்றத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

(எ-319)

# குருநாகலில் சிறுபோக செய்கைக்கு தத்துக் கிளிகளால் ஆபத்து

குருநாகல் ஜூன் 13

குருநாகல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சிறு போக நெற்செய்கையை கபில நிற தத்துக் கிளிகள் தாக்கி வருகின்றன.

தத்துக் கிளி ஒழிப்பு நடவடிக்கையில் சகல விவசாயிகளும், இப்போது தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

தத்துக் கிளி ஒழிப்பு நடவடிக்கை பூரண வெற்றியளிக்கவில்லையென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் இந்த முறை குருநாகல் மாவட்டத்தில் நெல் உற்பத்தியும் வீழ்ச்சியடையும் எனக் கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

(எ-138)

## தேக்குமரம் வெட்டிய ஐவர் பொலிஸ்வலையில்

பண்டாரவளை, ஜூன் 13

அரசாங்க காணியில் களவாக தேக்கு மரங்களை வெட்டி அவற்றைக் கடத்த முயன்றதாகக் கூறப்படும் ஐந்து பேரைப் பொலிஸார் வளைத்துப் பிடித்தார்கள்.

இச்சம்பவம் கதிர்காமம் பொலிஸ் பகுதியில் நடைபெற்றது.

மரங்களைக் கடத்திச் செல்லப் பயன்படுத்திய மாட்டு வண்டியையும் அவர்கள் கைப்பற்றினார்கள்.

சந்தேக நபர்கள் கதிர்காமம் மாஜிஸ்திரேட் திரு. உபாலி அபேரட்ன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் தலா ஐந்நூறு ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

(எ-39)

# விக்டோரியா நீர்த்தேக்கப் பகுதி வர்த்தகர்களுக்கு குறைந்த வட்டியில் கடன்

## அமைச்சர் காமினி ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 14

விக்டோரியா நீர்த் தேக்கப் பிரதேச வியாபாரிகளுக்கு, குறைந்த வட்டி வீதத்தில் கடனுதவி வழங்க, காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்க தீர்மானித்திருக்கிறார்.

இது தொடர்பாக நிதி அமைச்சருடன் இவர் இவ்வாரத்தில் பேச்சு வார்த்தை நடத்த இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நூற்றுக்கு 22 வீத கடன் வட்டியை, நூற்றுக்கு 12 வீதமாகக் குறைப்பதற்கு அமைச்சர் தீர்மானித்திருக்கிறார்.

விக்டோரியா நீர்த் தேக்கத்திற்கு உட்படும் பிரதேச மக்கள், குண்டசாலை, கரலியத்த, திகன போன்ற இடங்களில் குடி அமர்த்தப்படுவர்.

இவர்களின் நலனை முன்னிட்டு, இப்பிரதேசத்தில் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காகவே, மேற்படி குறைந்த வட்டியில் கடனுதவி வழங்கப்பட இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது வங்கிகள் மூலமாக இவர்களுக்கு வழங்கப்பட இருக்கும் கடன் தொகையை அதிகரிப்பதற்கும், வட்டி வீதத்தைக் குறைப்பதற்கும், கடனைத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய காலத்தை நீடிப்பதற்கும், அமைச்சர் நிதி அமைச்சருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க இருக்கிறார்

இவ்வாறு புதிய குடியேற்றத் திட்டங்களில் வியாபாரத்தை ஆரம்பிக்க இருப்பவர்கள் தொடர்பாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்படி அமைச்சர், மகாவலி அதிகார சபையைக் கேட்டுள்ளார்.

மேற்படி வியாபாரிகளுக்கு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கடனுதவி வழங்கும்படி மகாவலி அதிகார சபை பல தடவை நிதி அமைச்சையும், இலங்கை வங்கியையும் கேட்டிருந்தது.

இதனையடுத்தே கரலியத்த பகுதியில் 24 கடைகளும், திகன பகுதியில் 172 கடைகளும், குண்டசாலைப் பகுதியில் 72 கடைகளும் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிய வருகின்றது.

(எ-ர)

## அமைச்சரிடம் முறையீடு

பியகம, ஜூன் 13

புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் "பிரதீப" கமையில் மள்வானை ஊஹிடிவளை வாழ் முஸ்லிம்கள் ஒருவருக்கேனும் வீடுகள் வழங்கப்படவில்லை. இதையிட்டு மள்வானை ஊஹிடிவளை முஸ்லிம்கள் அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்காவிடம் முறையிட்டுள்ளனர்.

இப்பகுதி மக்களுக்குச் சொந்தமான காணியைச் சுவீகரித்து இப்பகுதி மக்களில் ஒருவருக்கேனும் வீடு கொடுக்கப்படாமை மிகவும் வேதனை அளிக்கின்றது என அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

(எ-43)

## ஆசிரியர்களின் வீட்டுப் பிரச்சினை நிவர்த்தியாகும்

வெலிகாமம், ஜூன் 13

ஹக்மன தொகுதியில் இருக்கும் ஆசிரியர்களின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

மேற்படி தொகுதியில் ஆசிரியர்களுக்கு என வீடமைப்புத் திட்டம் ஒன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இதற்கு என அரசு பன்னிரண்டு ஏக்கர் காணியையும் தெரிவு செய்துள்ளது.

ஹக்மன எம்.பி.திரு. மஹிந்த யாபா அபேவர்தனவின் வேண்டுகோளைத் தொடர்ந்தே அரசு இங்கு வீடமைப்புத் திட்டம் ஒன்றை நிறுவும் முடிவை எடுத்திருக்கிறது.

(எ-331)

# தொழிற்சாலை ஊழியர் நலன் கருதி விசேட காப்புறுதித் திட்டம்

கொழும்பு, ஜூன் 14

தொழிற்சாலைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்காக, விசேட காப்புறுதி முறையொன்றை ஆரம்பிப்பதற்கு, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தீர்மானித்திருக்கிறது.

"தனியார்" திடீர் விபத்து (கூட்டு) பாதுகாப்பு, மரண பிரதியுபகார திட்டம்" என்ற பெயரில் அறிமுகமாகும். இந்தப் புதிய காப்புறுதித் திட்டத்தின் கீழ், கடமையில் ஈடுபட்டிருக்கும் ஒருவர் விபத்தில் சிக்கி இறந்தால், அவர் குடும்பத்துக்கு 25 ஆயிரம் ரூபா நட்ட ஈடாகக் கிடைக்கும்.

விபத்து காரணமாக இரு கைகள், இரு கால்கள் முறிந்தால் 25 ஆயிரம் ரூபாவும், இரு கண்களையும் இழந்தால் 25 ஆயிரம் ரூபாவும், இந்தப் புதிய காப்புறுதி முறையின் மூலம் கிடைக்கும்.

அவ்வாறே, ஒரு கை, அல்லது ஒரு கால் முறிந்தால், ஒரு கண் குருடானால் 12 ஆயிரத்து 500 ரூபாவை, ஊழியர்கள் பெற முடியும்.

மேற்படி புதிய காப்புறுதித் திட்டம், முதற் தடவையாக சுதந்திர வர்த்தக வலயத்திலும், கம்பஹா மாவட்டத்திலும் அறிமுகப்படுத்தப்படும்.

(எ-11)

# மக்களும் பதவியும்

## சமாதான நீதிவான்

நிந்தவூர், ஜூன் 13



காரைதீவு 2ஆம் குறிச்சியைச் சேர்ந்த திரு. சீனித்தம்பி தங்கராசா, கல்முனை சமாதான நீதிவானாக, நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளில் பதின்மூன்று வருடங்களுக்கு மேலாக, உதவி ஆசிரியராக இவர் பணி புரிந்திருக்கிறார்.

28 வருடங்கள் தலைமை ஆசிரியராகவும், காரைதீவு தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவராக ஐந்து வருடங்களும் இவர் கடமையாற்றியிருக்கிறார்.

காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய பரிபாலன சபைத் தலைவராக சுமார் 34 வருடங்கள் பணியாற்றி சமயத் தொண்டு புரிந்திருக்கிறார்.

கடந்த பல வருட காலமாக காரைதீவு ஸ்ரீ இராமகிருஷ்ண சங்க சாரதா மகளிர் இல்ல மேற் பார்வையாளராக இருந்தும் தொண்டாற்றி வருகின்றார்.

(எ-217)

## நிர்வாகிகள்

வெலிகாமம், ஜூன் 13

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வெலிகாமம் கல்பொக்கை முஸ்லிம் மத்திய கிளையின் நடப்பு வருட நிர்வாகிகள் விவரம்:

தலைவர்: ஜனாப் ஏ. ஆர். எம் முஸ்தகீம், உப தலைவர்: ஜனாப் எம். ரீ. எம். இஸ்மத் கமால், ஜனாப் ஏ. டபிள்யூ. எம். ஜாபிர், செயலாளர்: ஜனாப் ஏ. கே. அப்துல் லதீப், ஜனாப் ஏ. ஆர். எம். நயீம். உதவிச் செயலாளர்: ஜனாப் எம். ஆர். முஹம்மது.

அங்கத்தவர்கள்: ஜனாப்கள் எம். இஸட். எம். பகுர்தீன், எம். எம். நிஸாம், எம். ஆர். சேகு பரீத், எம். எப். எம். மப்றூல், எம். எஸ். எம். ஸுபியான், எம். ரீ. எம். ஜலீல், எம். ரீ. எம். நஸர், எம். இஸட். எல்

# தேசியமயமாக்கப்பட்ட தோட்டங்களை தனியாரிடம்

மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன.

தோட்டங்கள் தனியாரிடம் மீண்டும் ஒப்படைக்கப்படுவதை நாம் ஆட்சேபித்து அவ்வப்

# வெலிகாமத்தில் அடிக்கடி மின் துண்டிப்பு

## பொலிஸார்

# தேசியமயமாக்கப்பட்ட தோட்டங்களை தனியாரிடம் தாரைவார்க்க வேண்டாம்

## — தொழிற்சங்க பிரமுகர் கந்தையா

நட்டத்தில் இயங்குவதாகக்கூறி எந்த ஒரு தோட்டத்தையும் மீண்டும் தனியாரிடம் ஒப்படைக்கும் நடவடிக்கையை நாம் கடுமையாக ஆட்சேபிக்கிறோம். தேசியமயமாக்கப்பட்ட தோட்டங்கள் தனியாரிடம் தாரை வார்த்துக் கொடுக்கப்படுவதால் தொழிலாளர் பாதிப்பு அடைவர். தேசிய வருமானம் பாதிப்படையும்.

தொழிலாளர் தேசிய சங்கப் பொதுச் செயலாளர் திரு. பி. வி. கந்தையா இப்படிக் கூறினார்.

அட்டன் பின்னோயா கீழ்ப்பிரிவு கோவில் மைதானத்தில் மேற்படி சங்கக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

அட்டன் மாவட்டத் தலைவர் திரு. எஸ். பெருமாள் இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. பி வி. கந்தையா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

கடந்த காலங்களில் தோட்டங்கள் தனியாரிடமும் வெளிநாட்டு நிறுவனங்களிடமும் முடங்கிக் கிடந்தன. இக்கால கட்டங்களில் தேசிய வருமானமும் தொழிலாளரின் உழைப்பும் வெகுவாக சுரண்டப்பட்டே வந்தன. இதையடுத்து தோட்டங்கள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட்டன. ஆரம்பத்தில் தேசிய மய திட்டத்தை ஆதரித்துவரவேற்க நாம் தவறவில்லை.

தேசியமயமாக்கப்பட்ட தோட்டங்கள் ஜனவசம, பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகிய அமைப்புக்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. இந்நிர்வாகங்களின் கீழ் இயங்கிவரும் பல தோட்டங்கள் மீண்டும் தனியாரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன.

தோட்டங்கள் தனியாரிடம் மீண்டும் ஒப்படைக்கப்படுவதை நாம் ஆட்சேபித்து அவ்வப்போது தொழிற் சங்கங்கள் போராட்டங்களையும் நடத்தியிருக்கின்றன. நடத்தியும் வருகின்றன. தொழிற் சங்கங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்தே இப் போராட்டத்தை நடத்தி வருகின்றன.

தனியார் எவராக இருந்தாலும் அவரிடம் தோட்டங்கள் தாரை வார்த்துக் கொடுப்பதை ஆட்சேபிக்க வேண்டியது தொழிற் சங்கங்களின் கடமை. இதில் வேண்டியோர், வேண்டாதார் என்ற ரீதியில் எந்த ஒரு தொழிற் சங்கமும் செயல்படக்கூடாது.

தமக்கு வேண்டியோரிடம் தோட்டம் ஒப்படைக்கப்படுகின்றது என்பதற்காக ஒரு சில தொழிற் சங்கங்கள் ஆட்சேபனை நடவடிக்கைகளில் ஈடுபடத் தயங்குகின்றன, மறுக்கின்றன, பின்வாங்குகின்றன.

இது தொழிலாளரினதும் தொழிற் சங்கங்களினதும் உரிமையையும் பலத்தையும் இழக்கச் செய்துவிடும்.

இவ்வாறு அவர் கூறினார். (எ)

# வெலிகாமத்தில் அடிக்கடி மின் துண்டிப்பு

## பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு

வெலிகாமம், ஜூன் 13

வெலிகாமத்தில் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருவதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக கல்பொக்கை, புதிய தெரு, பழைய தெரு, கோட்டகொடை போன்ற பகுதிகளில் உள்ள மக்களே பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.


ரயில் நிலையம், பொலீஸ் நிலையம், ஆஸ்பத்திரி, தபால் அலுவலகம், அரசாங்க அதிபர் அலுவலகம் போன்றவற்றின் அலுவல்கள்கூட இதனால் தடைப்படுகின்றன.

இரவில் திருடர் தொல்லை அதிகரிப்புக்கும் இது ஒரு காரணமாக அமைந்திருக்கிறது.

வெலிகாமத்தில் அடிக்கடி ஏற்பட்டு வரும் மின்சாரத் தடை பற்றி வெலிகாமம் நகர சபை எந்தவிதமான முன் அறிவித்தலும் தமக்குக் கொடுப்பதில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது நோன்பு காலமாதலால் முஸ்லிம் மக்கள் அதிகளவு பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

(எ-331)



ஏருவூர் அலிகார் மகா வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. செல்வன் பைசால் நியமத்துல்லாஹ் 1983ஆம் ஆண்டில் 8ஆம் வகுப்பில் கணிதம், தமிழ், இஸ்லாம் ஆகிய பாடங்களில் அதிக புள்ளிகளைப் பெற்றமைக்காகவும், அதே ஆண்டில் சகல பாடசாலை நாட்களில் சமுகமளித்தமைக்காகவும் பரிசுகளைப் பெற்றார். பிரதிக் கிராம அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் அகமட் பரீத் மீரா லெப்பையிடமிருந்து அவர் பரிசு பெறுவதைக் காண்க.

அருகில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கே. ஜே. முத்துராஜாவும், கல்வி அதிகாரி திரு. எல். எம். ஜோசப் ஆகியோரும் அமர்ந்திருக்கின்றனர்.

(எ-319)

முகப்படுத்தப்படும்.

(எ-11)

# பொலிஸார் எச்சரிக்கை

மாவனல்லை, ஜூன் 13

பிரயாணிகள் தாம் விரும்பிய பஸ்களில் பயணம் செய்வதற்கு தனியார் பஸ் நடத்துனர்கள் தடையாக இருக்கக் கூடாது.

இவ்வாறு மாவனல்லை பொலீஸ் போக்குவரத்துப் பிரிவு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

தனியார் பஸ் நடத்துனர்கள் பஸ் பிரயாணிகளை தம்முடைய பஸ்களில் ஏற வேண்டும் என நிர்ப்பந்தித்து வருவதாக அடிக்கடி பொலீஸாருக்குப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை அடுத்து மாவனல்லை பொலீஸ் போக்குரத்துப் பகுதியினர் தனியார் பஸ்களுக்கு இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கின்றனர். (எ-188)

# 11 வயது சிறுமி பிற்பொக்கெற் அடிக்கையில் கைது

மாவனல்லை, ஜூன் 12

பதினொரு வயதான சிறுமி ஒருத்தி பிற்பொக்கற் அடிக்க முயன்ற போது, பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் பேராதனை பொலீஸ் பகுதியில் நடைபெற்று உள்ளது.

பேராதனை நகரில் உள்ள ஒரு பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காக காத்திருந்த ஒரு பெண்ணின் கழுத்தில் தொங்கிய கைப்பையை, பிளேட்டினால் வெட்டி அதில் உள்ள பணப் பையை அபகரிக்க முயன்ற போது மேற்படி சிறுமி கைது செய்யப்பட்டார்.

பேராதனை பொலீஸ் குற்றத் தடுப்பு பகுதி சார்ஜன்ட் பண்டார மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகிறார்.

(ப-188)

எம். எம். நிஸாம், எம். ஆர். சேகு பரீத், எம். எப். எம். மப்றூல், எம். எஸ். எம். ஸூபியான், எம். ரீ. எம். ஜலீல், எம். ரீ. எம். நலர், எம். இஸட். எல். ஏ. காதர், எம். இஸட். முஹம்மது, எம். வை. எம். பாஹிம், ஏ. டபிள்யூ. எம். முளப்பர், எம். எச். எம். ஸக்றூல் பாச்சா.

(எ-331)

★

பேசாலை, ஜூன் 13

மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் குழுவின் நடப்பு வருட நிர்வாகிகள் விவரம்:—

தலைவி: செல்வி. சின்னத்தம்பி பாக்கியம், துணைத்தலைவி: நியாசா றகுமான், செயலாளர்: என். கதீஜா, துணைச் செயலாளர்: திருமதி. ஏ. ஜே. மரிய செலின், பொருளாளர்: பி. பௌசியா. (எ—251)

★

கிண்ணியா, ஜூன் 13

கிண்ணியா மஹ்ரூப் நகர் (புள்ளைகொள்ளி மணல்) கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகிகள் விவரம் வருமாறு:

தலைவர்: ஜனாப் எம். அப்துல் அமான் (கதீப்). உப தலைவர்கள்: ஜனாப்கள் கே. எம். பளீல், ஏ. ஏ. அஸீஸ். செயலாளர். திரு. எஸ். சிந்தாத்துரை. துணைச் செயலாளர்: ஜனாப் ஏ. ஆர். பரீத். பொருளாளர்: ஏ.ஏ. முத்தலிபு.

நிர்வாக சபை உறுப்பினர்கள்.

ஜனாப்கள் ஏ. எம். அனிபா. வீ. ராசீக், எம். சீ. ஏ. கபூர், ஏ. மஜீதுகான், கே. எம். சலாம், எம். ஏ. லத்திப், திரு. த. மாணிக்கராசா.

கணக்குப் பரிசோதகர்: ஜனாப் எஸ். ஏ. ஜமால்தீன்.

போஷகர்கள்: ஜனாப் ஏ. சீ. அப்துல் சமத் (கிண்ணியா பிரதேச சபைத் தலைவர்). ஜனாப் எம். சீ. அபூத்தாலிப் (மஹ்ரூப் நகர் பள்ளிவாசல் பரிபாலன சபைத் தலைவர்).

(எ-151)

# தற்காலிக நியமனம்

பேசாலை, ஜூன் 13

மன்னார் – இரணை, இலுப்பைக்குளம் பகுதி பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளராக இலுப்பைக் குளம் கிராம சேவை அலுவலர் ஜனாப் எஸ். எம். பாருக் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இரணை இலுப்பைக் குளம் பகுதிக்கு நிரந்தர பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் ஒருவர் நியமிக்கும் வரை இப்பகுதி கிராம சேவை அலுவலரே பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளராகக் கடமையாற்றுவார்.

(எ-251)

# புதைகுழிதோண்ட சென்றவர் அடித்துக் கொலை

கொழும்பு, ஜூன் 14

கிருமிநாசனி அருந்தித் தற்கொலை செய்து கொண்ட யுவதிக்கு புதைகுழி தோண்டச் சென்ற நபர், ஒரு கோஷ்டியினரால் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

இச்சம்பவம் தலங்கமை பொலீஸ் பிரிவில் நிகழ்ந்துள்ளது.

தலங்கமை வடக்கு, தலஹேன என்ற இடத்தைச் சேர்ந்த, நான்கு பிள்ளைகளின் தந்தையான சுகததாஸ என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார். இறக்கும் போது இவருக்கு வயது 40.

இறந்த யுவதியை அடக்கம் செய்வதற்காக புதை குழி தோண்டி விட்டு, திரும்புகையில், ஒரு கோஷ்டியினர் இவரை அடித்துக் கொலை செய்து, இரத்தினக் கல் தோண்டும் குழியொன்றில் போட்டுள்ளனர்.

தலங்கமை பொலீஸார் இவரின் சடலத்தை கண்டெடுத்தனர்.

தலங்கமை உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. எட்வார்ட் திலகரத்ன, இந்த கொலைச் சம்பவம் தொடர்பாக நான்கு சந்தேக நபர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளார்.

(ப-11)

# ஜூலை வன்செயல் போன்ற ஒரு சம்பவத்துக்கு இனி இடமளிக்கமாட்டோம்

## பாதுகாப்பு அமைச்சர் லலித் உறுதி

வெலிகாமம், ஜூன் 13

கடந்த ஆண்டு ஜூலையில் நடைபெற்ற இனக் கலவரம் போன்ற வன்செயல்கள் இனி நாட்டிலே இடம் பெறக் கூடாது. இனிமேல் இப்படியான சம்பவங்கள் நடைபெற நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

இவ்வாறு கூறினார் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி.

துங்காலைத் தொகுதி குருபொக்குண பகுதிக்கு மின் விநியோகம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு அமைச்சர் அத்துலத் முதலி உரை நிகழ்த்தினார்.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

வடபகுதி பயங்கரவாதிகள் தமது கொடிய செயல்களால் தென் இலங்கை மக்களின் ஆவேசத்தைக் கிளற முற்படுகின்றனர். தென்பகுதி மக்கள் வடபகுதி பயங்கரவாதிகளின் திட்டங்களை நன்கு அறிந்து கொண்டுள்ளனர்.

இந்த நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் பறங்கியர் போன்ற பல இன மக்கள் வாழுகின்றனர். இலங்கையில் பிறந்த அனைவருக்குமே இலங்கை சொந்தமானது.

அரசு தமிழ் மக்களின் எதிரியல்ல. அரசாங்கம் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் துரோகம் செய்யமாட்டாது. இதனைத் தமிழ் மக்கள் உணர வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிராக அரசு செயல்படவில்லை. பயங்கரவாதிகளுக்கு எதிராகவே செயல்பட்டு வருகிறது.

பயங்கரவாதிகளை முற்றாக ஒழித்துக் கட்டுவதே எமது அரசாங்கத்தின் நோக்கமாகும். பேச்சுவார்த்தைகள் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

எனவே பயங்கரவாதிகள் தம்மிடம் உள்ள ஆயுதங்களை விட்டுவிட்டு அகிம்சை வழியைக் கடைப்பிடித்து ஜனநாயக முறையில் செயல்பட முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

(எ-331)

# தாமதமின்றி மின் கட்டண பில்கள்

கொழும்பு, ஜூன் 14

இலங்கை மின்சாரக் கம்பனி மூலம், மின்சாரம் விநியோகிக்கப்படும் 13 ஆயிரம் பாவனையாளர்களுக்கும், மாதாந்த மின்சார கட்டண பில்களை தாமதமின்றி அனுப்ப, கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த முதலாம் திகதி முதல், கோட்டை ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் நகர சபைக்குட்பட்ட பகுதிகளுக்கு மின்சாரத்தை விநியோகிக்கும் பொறுப்பை இலங்கை மின்சார கம்பனி ஏற்றிருக்கிறது.

இந்தப் பாவனையாளர்களிடம் ஜூன் மாத கட்டணங்களை அறவிடுவதற்கு அடுத்த வாரம் முதல் பில்கள் அனுப்பி வைக்கப்படும்.

பில்கள் அனுப்பி சில வாரங்களுக்குள் பணத்தை செலுத்தி விட வேண்டும் என்று பணிக்கப்படும் என இலங்கை மின்சாரக் கம்பனியின் தலைவர் திரு. எஸ். எம். சுபசிங்க தெரிவித்தார்.

(ப-11)

14—6—1984

காலை

5.30 நாதாஞ்சலி
5.35 பஜனைப் பாடல்கள் — ஸ்ரீமதி மணி கிருஷ்ண சாமி
5.50 பக்திப் பாடல்கள்
6.00 சைவநற்சிந்தனை
6.05 இஸ்லாமிய நற்சிந்தனை
6.10 பாமாலை
6.30 செய்திகள்
6-50 மெல்லிசைப் பாடல்
7.00 வயலின் – ரி – என். கிருஷ்ணன்
7-30 மாகாணச் செய்திகள்
7.35 இசையமுதம்
8.05 வாத்திய மஞ்சரி
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி

மாலை

6.00 செய்திகள்
6.10 அறிவிப்புகள்
6.25 இப்தார் நிகழ்ச்சி
6.35 திருவருள்நெறி
7.05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்

இரவு

8.00 உலகச் செய்திகள்
8.10 இளஞ்சுடர்
8.40 உரைச் சித்திரம் — "தூக்கம் தரும் தாக்கம்" – ரி. சபாரத்தினம்
9.00 செய்திகள்
9.30 பாட்டு எல். திலகநாயகம் போல்

ரூபவாஹினி

5.30 பிக் புளூ மார்பிள்
6.00 ஹியர்ஸ் ஹூமர்
6.25 யூ அன்ட் யுவர் கன்ட்ரீ
6.55 செய்திகள் – தமிழ்
7.15 "கீதாவணி"
7.40 ஜப்பானிய சமாதானக் கோபுரம்
7.55 பியூசர் அட்ரக் சன்ஸ்
8.15 செய்திகள் – சிங்களம்
8.35 "எக் மவககே தருவோ"
9.05 விண்ட்ஸ் ஒப் வோர்
9.30 செய்திகள் – ஆங்கிலம்
9.50 விண்ட்ஸ் ஒப் வோர் (தொடர்ச்சி)
10.30 உலகச் – செய்திகள்

## ஐ. டி. என்.

6.31 ஜஸ்ட் வில்லியம்
7.00 பிரைட் அன்ட் பிறிஸி
8.00 அனு அன்ட் த கிங்
8.30 டொக்டர்ஸ் டோடர்ஸ்
9.00 கோல்டன் இயர்ஸ்
9.30 செய்திகள் – ஆங்கிலம்
9.45 கோல்டன் இயர்ஸ்

சாரண சேவையிலீடுபடும்

# ஆசிரியர்களுக்கு தனிச் சிறப்பு கிடைக்கிறது

## உடற்கல்வி அதிகாரி கருத்து

வவுணதீவு, ஜூன் 13
சாரண சேவையில் ஈடுபாடு கொண்ட ஆசிரியர்களுக்கு ஆசிரிய சமூகத்தில் தனியானதொரு சிறப்பும் – கௌரவமும் மேலதிகமாக கிடைக்கின்றது.

இவ்வாறு மட்டக்களப்பு சத்துருகொண்டான் சர்வோதய பண்ணையில் மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒழுங்கு செய்யப்பட்ட 3 நாள் சாரணர் பயிற்சி முகாம் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றிய உடற்கல்வி அதிகாரி திரு. க. அன்றியாஸ் தனது உரையில் குறிப்பிட்டார்.

திரு. எஸ். பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் அவர் தொடர்ந்துரையாற்றுகையில்:

சாரண சேவையில் ஈடுபாடு கொண்டவர்கள் ஒழுக்கம், கட்டுப்பாடு நிறைந்தவர்களாக வாழப் பழகிக் கொள்கிறார்கள்.

இதனால் அவர்களுடைய வாழ்க்கையில் பிரச்சினைகள் உருவாகுவது இல்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சாரண சேவைக்கு புதுப் பொலிவு வழங்க நாம் செயல்பட வேண்டும்.

இதற்கு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று அவர் கூறினர்.

இவ்வைபவத்தில் மாவட்ட சாரண ஆணையாளர் ஜனாப் ஹூப்லின் சாம்டின், கிழக்கு பிராந்திய ஆணையாளர் திரு. விஜித தெரணியகல உட்பட பலர் உரையாற்றினர். (ந–318)

## சாரண ஆணையாளர் நியமனம்

வவுணதீவு, ஜூன் 13
மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் பதவிக்கு, மட்டக்களப்பு சர்வோதய இணைப்பாளர் ஜனாப் ஹூப்லின் சாம்டின் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாப் சாம்டின் இந்த நியமனம் அடங்கிய ஆணையை கிழக்குப் பிராந்திய ஆணையாளர் திரு.விஜித தெரணியகலவிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இது தொடர்பாக சத்துருகொண்டான் சர்வோதய பண்ணையில் நடைபெற்ற வைபவத்தில் சர்வதேச சாரணர் சங்க பிரதிநிதி திரு. எஸ். தர்மலிங்கம், உடற்கல்வி அதிகாரி திரு. கி. அன்றியாஸ் ஆகியோருடன், மாவட்டப் பாடசாலை சாரண ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ந–318)

# விளையாட்டுப் பகுதி

## மெய்வல்லுநர் போட்டிகள்

கொழும்பு, ஜூன் 14
ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று நடைபெறுகிறது.

வித்தியாலய அதிபர் திரு. வீ. த. திருநாவுக்கரசு (நாவேந்தன்) தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் வட மாநில மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. இ. முருகையன் பிரதம

மேலும் மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. தம்பித்துரை, மானிப்பாய் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள். (ந–ய)

★

வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

புங்குடுதீவில் உள்ள 15 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பச்சை, சிவப்பு, மஞ்சள் என்னும் மூன்று இல்லங்களாகப் பிரிந்து இப்போட்டியில் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் பச்சை இல்லம் முதலிடத்தைப் பெற்றது.

மஞ்சள், சிவப்பு இல்லங்கள் முறையே இரண்டாம், மூன்றாமிடங்களைப் பெற்றன.

புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர் திரு. ஆர். எஸ். செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இப்போட்டியின் போது யாழ். கல்வித் திணைக்களத்தைச்

## புஷ்பதான மகளிர் கண்டி மாவட்ட ஹாக்கி சாம்பியன்

கொழும்பு, ஜூன் 14
கண்டி மாவட்டத்திலுள்ள பெண்கள் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஹாக்கிச் சுற்றுப் போட்டியில் புஷ்பதான மகளிர் வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த வருடம் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஹாக்கிச் சுற்றுப் போட்டியில் புஷ்பதான மகளிர் வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

6 பாடசாலைகள் கலந்து கொண்ட கண்டி மாவட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் மஹாமாயாக் கல்லூரியை 1—0 புள்ளிகளால் புஷ்பதான மகளிர் வித்தியாலயம் தோற்கடித்தது.

அடுத்த மாதம் சுகததாச அரங்கில் நடைபெறும் அகில இலங்கைப் பாடசாலைகள் ஹாக்கிப் போட்டியில் புஷ்பதான மகளிர் வித்தியாலய அணி கலந்து கொள்ளவுள்ளது.

இந்த அணிக்கு ஜனாப் ஏ. ஐ. எம். அன்வர் பயிற்சியாளராகக் கடமையாற்றுகிறார். (ந)



இன்றைய திரைகளில்

4-வது வாரம்!
சமந்தா
10.00, 2.00, 6.00, 9.30
வின்ஸர்
(யாழ். நகர்)
10.30, 2.30, 6.00, 9.30
சரஸ்வதி
(திருமலை)
6-00 9-30.
மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த
ஒளி விளக்கு
(கலர்)
(புத்தம் புதிய கொப்பி)

12-வது வாரம்
ஒருதலை காதலின் விளைவுகளை சித்தரிக்கும் கண்ணீர் காவியம்
(இன்று மட்டும்)
லிடோ
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
லக்கி

6.31 ஜஸ்ட் வில்லியம்
7.00 பிரைட் அன்ட் பிரீனி
8.00 அஜு அன்ட் த கிங்
8.30 டொக்டர்ஸ் டோடர்ஸ்
9.00 கோல்டன் இயர்ஸ்
9.30 செய்திகள் – ஆங்கிலம்
9.45 கோல்டன் இயர்ஸ் (தொடர்ச்சி)

வித்தியாலய அதிபர் திரு. வீ. த. திருநாவுக்கரசு (நாவேந்தன்) தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் வட மாநில மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. இ. முருகையன் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

திரு. வி. தர்மலிங்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள்.

(ந-ய)

★

புங்குடுதீவு குழுமப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர்ப் போட்டி புங்குடுதீவு மகா

மிடங்களைப் பெற்றன.

புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர் திரு. ஆர். எஸ். செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இப்போட்டியின் போது யாழ். கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த கல்வியதிகாரி திரு. கே. கந்தசாமி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.

(ந-240)



ஹாரிஸ்பத்துவை வட்டார தமிழ்ப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி கண்டி பொலீஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கண்டி மாவட்ட அபிவிருத்திச் சபை அங்கத்தவர் ஜனாப் ஏ. சி. ஏ. எம். நூமான் உரையாற்றுவதையும்,

கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட கண்டி மாவட்ட பிரதிக் கல்வி அதிகாரி திரு. டி. எல். இத்தமல்கொட அருகில் வீற்றிருப்பதையும் படத்தில் காண்க.

(ந)

தெவிநுவரையில்

# 'ரொனி டி மெல்' கேடயத்துக்கான கிரிக்கெட் போட்டிகள்

மாத்தறை, ஜூன் 13

தெவிநுவரை "சில்வஸ்டார்" விளையாட்டுக்கழகம் "ரொனி டி மெல்" கேடயத்துக்காக கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடத்த விருக்கிறது.

நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல்லின் அனுசரணையுடன் தெவிநுவரை எம். பி. திரு. பி. எஸ். எல். கலப்பத்தியின் தலைமையின் கீழ் இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடைபெறும்.

மாத்தறை மாவட்டத்திலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களும் பாடசாலைகளின் கிரிக்கெட் குழுக்களும் இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

30 ஓவர்களைக் கொண்ட இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு கேடயங்களுடன் பணப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தெவிநுவரை பொது விளையாட்டரங்கில் இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஜூலை மாத முற்பகுதியில் நடைபெறும்.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் குழுக்கள் எதிர்வரும் 15-ஆம் திகதிக்கு முன் தெவிநுவரை சில்வஸ்டார் கழகத்தின் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

(ந-25)

# கிளிப்பர்ட் கிண்ண றகர் ஆட்டங்கள்

கொழும்பு, ஜூன் 14

சி. எச். அன்ட் எப். சி. அணிக்கும் விமானப்படை அணிக்கும் மெயிட்லண்ட் கிரசெண்டில் நடைபெற்ற றகர் ஆட்டத்தில் சி. எச். அணி 30—7 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

இடைவேளையின் போது 16—0 புள்ளிகளால் சி. எச். அணி முன்னணியில் நின்றது.

சமன் ஜெயசிங்க, ஹாறூன் மூஸாபர், சந்ருஸன் பெரேரா, ரவி விஜயநாதன், பாரத கேகொட ஆகியோர் சி. எச். அணிக்கான புள்ளிகளையும் திஸ்ஸ பெர்னாண்டோ, திஸ்ஸ விமலசூரிய ஆகியோர் விமானப் படை அணிக்கான புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர்.

நிமல் லூக் இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(ந)

★

பொலீஸ் அணிக்கும், கண்டி அணிக்குமிடையே நித்தவலையில் நடைபெற்ற ஆட்டத்தில் பொலீஸ் அணி 10 – 6 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

இடைவேளையின் போது 4–3 புள்ளிகளால் பொலீஸ் அணி முன்னணியில் நின்றது.

எம். நஸீப், எம். எச். மர்ஸோ ஆகியோர் பொலீஸ் அணிக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

கண்டி அணிக்காக சி. எஸ். ஏகநாக்காவும், ருவவன் குணசேகரவும் புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

எஸ். டபிள்யூ. சாங் இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

★

ஹவலொக்ஸ் அணிக்கும், இராணுவ அணிக்குமிடையே காலிமுகத்தில் நடைபெற்ற றகர் ஆட்டத்தில் ஹவலொக்ஸ் அணி 11 – 9 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

இடை வேளையின் போது 3 – 0 புள்ளிகளால் ஹவலொக்ஸ் அணி முன்னணியில் நின்றது.

எம். ஆர். மூஸா இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(ந)



இசிபத்தன கல்லூரி அணிக்கும் றோயல் கல்லூரி அணிக்குமிடையே லோங்டன் பிளேஸில் நடைபெற்ற றகர் போட்டியில் இடம் பெற்ற சுவாரஸ்யமான கட்டமொன்றைப் படத்தில் காண்க.

இப்போட்டி வெற்றி தோல்வியற்ற நிலையில் முடிவுற்றது.

(ந*ச)

வின்சன்ட் பெரேரா கிண்ண

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஜூலையில் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 14

இலங்கை உதைபந்தாட்டக் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் வின்சன்ட் பெரேரா கிண்ணத்துக்காக நடைபெறும் புதிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஜூலை மாதம் முதல் வாரம் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கையிலுள்ள சிறந்த உதைபந்தாட்ட கழகங்களை தரம் பிரிப்பதற்காக இச் சுற்றுப் போட்டி முதல் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் வெளி ஊர்களிலுள்ள சிறந்த உதைபந்தாட்டக் கழகங்களும் பங்குபற்றுகின்றன.

கேகாலை இளைஞர், காலி இளைஞர், நீர்கொழும்பு இளைஞர், நீர்கொழும்பு ஜுபிடர்ஸ், சன்றைஸ் வி. க. (கண்டி), மத்தியம லங்கா வி. க. (கண்டி), பதுளை யுனைடட் ஆகிய வெளியூர் அணிகள் இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றும் அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

"ஏ" பிரிவில்.

சோண்டர்ஸ், ஓல்ட் பென்ஸ், பிளக் ஸ்கொயர், யோர்க், கொழும்பு நகரசபை, நீர்கொழும்பு இளைஞர், சன்றைஸ் (கண்டி), விமானப்படை (மிக்ஸ்), பொலீஸ் வி. க., பதுளை யுனைடட் ஆகியவையும்.

"பி" பிரிவில்:

விக்டரி, ரட்ணம், சனி மவுண்ட், செரன்டிப், ஜாவா லேன், ஜுபிடர்ஸ் (நீர்கொழும்பு), மத்தியம லங்கா (கண்டி), இராணுவம் (புல்லட்ஸ்), கேகாலை இளைஞர், காலி இளைஞர், இலங்கை போக்குவரத்துச் சபை ஆகிய அணிகளும் இடம் பெறுகின்றன.

(ந)

ஒலிம்பிக்கில் பங்குபற்றும்

# இலங்கை அணி வீரர்களுக்கு காப்புறுதி

கொழும்பு, ஜூன் 14

இலங்கையின் சார்பாக லொஸ் ஏஞ்ஜல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்கள் காப்புறுதி செய்யப்படுவார்கள்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இவர்களுக்கான காப்புறுதியை இலவசமாக வழங்கவுள்ளது.

விளையாட்டுத் துறையில் அபிமானம் கொண்ட காப்புறுதிக் கூட்டுத்தாபன தலைவர் திரு. சந்தன டி சில்வாவின் பெரு முயற்சியால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

ரனில் டயஸ், லலின் வீரசிங்க, ஜுலியன் பொலீங், எம். எம். டி. சில்வா ஆகியோர் இலங்கையின் சார்பாக போட்டிகளில் கலந்து கொள்வார்.

தேசிய ஒலிம்பிக் கமிட்டித் தலைவர் ரோய் டி சில்வா பிரேமா பின்னவல ஆகியோர் இலங்கை அணிக்கு நிர்வாகியாகவும், உதவி நிர்வாகியாகவும் கூடச் செல்வார்கள்.


லிடோ
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
லக்கி
(இனிகத்தேனை)
6-00, 9-30,
குமரன்
(மன்னார்)
2.00, 6.00, 9.30,
செல்வி
(செங்கலடி)
600, 9-30,
சேகர், ரூபா, ரவிந்தர் உஷா நடித்த
ஒருதலை ராகம்
(கலர்)
கதை, வசனம், டைரக்ஷன்; இசை: ராஜேந்தர்


## வாழ்த்துச் செய்தி

கொழும்பு, ஜூன் 14

பிலிப்பைன்ஸ் தேசிய தினத்தை முன்னிட்டு அந்நாட்டு ஜனாதிபதிக்கு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

(ப-7)

## தொண்டமான் தலைமையில் கோழிப்பண்ணை திறப்பு

வவுனதீவு, ஜூன் 13

பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் சத்துருகொண்டான் என்னுமிடத்தில் 15 லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட பாரிய கோழிப் பண்ணை எதிர்வரும் 17 ஆம் திகதி திறந்து வைக்கப்படும்.

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. தொண்டமான் இதனைத் திறந்து வைப்பார்.

கால்நடை சுகாதார திணைக்களத்தினால் பராமரிக்கப்படவிருக்கும் இக் கோழிப் பண்ணைக்குரிய உபகரண உதவிகள் ஒல்லாந்து அரசினால் வழங்கப்பட்டிருக்கின்றன.

இப்பண்ணை திறப்பு விழாவையடுத்து பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

(எ—319)

# தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறு தோறும் வெளிவரும்

## 4¼ கோடி டாலர் உதவி

வாஷிங்டன், ஜூன் 13

மாதுறு ஓயா நீர்ப்பாசனத் திட்டத்துக்கு உலக வங்கியிடமிருந்து 4 கோடி 21 லட்சம் டாலர் கடனுதவி கிடைக்கும்.

இந்தக் கடனுதவியை அங்கீகரித்திருப்பதாக உலக வங்கி வாஷிங்டனில் அறிவித்தது.

மாதுறு ஓயா பகுதிகளில் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டம் 16 கோடி டாலர் செலவில் அமுல் செய்யப்படவிருக்கிறது.

இதில் 9 கோடி டாலர்கள் சவூதி நிதியிலிருந்தும், கனேடிய சர்வதேச அபிவிருத்தி ஏஜன்ஸியிடமிருந்தும் கிடைக்கும். உலக வங்கி 4 கோடி 21 லட்சம் டாலர்களை வழங்கும். மீதிச் செலவினத்தை இலங்கை ஏற்றுக்கொள்ளும். (ப)

## ஒரு லட்சம் ரூபா குடைப் புடைவை தடுத்து வைப்பு

சிங்கப்பூரிலிருந்து வரவழைக்கப்பட்ட ஒரு லட்சம் ரூபா பெறுமதியான, குடைப் புடைவைகளையும், குடை தயாரிப்புக்கான மற்றும் பொருட்களையும் சுங்கத் திணைக்களம் தற்காலிகமாக தடுத்து வைத்திருக்கிறது.

இந்தப் பொருட்கள் சுங்கத் திணைக்கள சோதனையின் பின்னர் துறைமுக வாசல் வழியாக எடுத்துச் செல்ல எத்தனிக்கப்பட்டபோது மீண்டும் தடுத்து சோதனையிடப்பட்டது. சுங்கப் புலனாய்வுப் பிரிவு, உதவி அதிகாரி திரு. அமரபாலவின் மேற்பார்வையில் சோதனை நடந்தது.

குடைப் புடைவை ஆறாயிரம் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பத்தாயிரம் யார் புடைவை அதில் இருந்ததாக பரிசோதனையின் போது தெரிய வந்தது.

இறக்குமதி வரியை செலுத்தாமல், லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான குடைப் புடைவையும் மற்றும் உபகரணங்களும் இவ்வாறு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சுங்கத் திணைக்களம் இது தொடர்பாக மேலும் விசாரணை நடத்தி வருகின்றது. (ப-11)




பாரிஸிலிருந்து சுமார் 120 விற்பனைப் பிரதிநிதிகள் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு திங்கட்கிழமை இலங்கை வந்தனர். கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அவர்கள் வந்திறங்கிய போது எடுத்த படம். (ப)

## மௌலவி ஆசிரியர்: நூறு பேர் தெரிவு

கொழும்பு, ஜூன் 14

முஸ்லிம் பாடசாலைகளில் இஸ்லாமிய பாடம் போதிப்பதற்காக, நூறு மௌலவி ஆசிரியர்கள் போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஜூலை மாத ஆரம்பத்தில், கல்விச் சேவைகள் ஆணைக்குழுவினரால் நடத்தப்படும்.

போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டிருப்போரில் பெரும்பான்மையானவர்கள் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (ப-ய)

## விமலா மத்துகமை விஜயம்

கொழும்பு, ஜூன் 14

மண் சரிவினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைக் கண்டறிவதற்காக, கிராம அபிவிருத்தி அமைச்சர் திருமதி விமலா கன்னங்கரா இம்மாதம் 16ஆம் திகதி மத்துகமை பகுதிக்கு விஜயம் செய்கிறார்.

அவர் அகலவத்தை, புளத்சிங்கள ஆகிய பகுதிகளுக்கும் செல்லவிருக்கிறார்.

நிதி அமைச்சு, உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகள் பலரும் அமைச்சருடன் மேற்படி பகுதிகளைப் பார்வையிடவிருக்கின்றனர். (எ-11)

## பண்டாரவளை சிவசுப்பிரமணிய கோயில் புனரமைப்புக்கு நிதி

பண்டாரவளை, ஜூன் 13

பண்டாரவளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலின் புனரமைப்பு வேலைகளுக்காக, பண்டாரவளை இந்து இளைஞர் மன்றம் 15 ஆயிரம் ரூபாவை வழங்கியிருக்கிறது.

இத்தகவலை மேற்படி மன்றத்தின் பொருளாளர் திரு. கே. இராமலிங்கம் தெரிவித்தார்.

கடந்த ஜூலை வன்செயலின் போது இக் கோயில் காடையர்களால் சேதப்படுத்தப்பட்டது. இதன் புனரமைப்பு வேலைகளுக்காக இந்து கலாசார அமைச்சு இதுவரை 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவை வழங்கியிருக்கிறது. மேலும் உதவிகள் கிடைக்கவிருக்கின்றன.

கோயிலின் திருத்த வேலைகளை ... லது. நடுப்பகுதியில் கும்பாபிஷேகத்தை நடத்தவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. (ல-39)

## 3 அரபு தூதுவர்கள் ஜனாதிபதியுடன் பேச்சு

கொழும்பு, ஜூன் 14

மூன்று அரபு நாடுகளின் தூதுவர்கள் செவ்வாய்க்கிழமை காலை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைத் தனித்தனியே சந்...


...யிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

பதில் வெளிவிவகார அமைச்சர் திரு. டிரோன் பெர்ணாண்டோவும் இச்சந்திப்பின் போது உடனிருந்தார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத்...

கடந்த வாரம் எகிப்திய தூதுவரும், பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதியும், ஜனாதிபதியைச் சந்தித்து மேற்கண்டவாறு கருத்து தெரிவித்திருந்தனர்.

பலஸ்தீனம் சம்பந்தமான அர...



இதன் புனரமைப்பு வேலைகளுக் காக இந்து கலாசார அமைச்சு இதுவரை 1 லட்சத்து 10 ஆயி ரம் ரூபாவை வழங்கியிருக்கிறது. மேலும் உதவிகள் கிடைக்க விருக்கின்றன.

கோயிலின் திருத்த வேலைகளை மேற்படி கோயில் தர்மகர்த்தா திரு. ஆர். ஸ்ரீ. பெருமாள் மேற் கொண்டிருக்கிறார். இம்மாத இறுதிக்குள் திருத்த வேலைகள் முடிவுறலாம் என எதிர் பார்க்கப்படுகிறது எதிர்வரும் ஜூலை மாத முற்பகுதியில் அல்

கொழும்பு, ஜூன் 14

மூன்று அரபு நாடுகளின் தூதுவர்கள் செவ்வாய்க் கிழமை காலை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்த னவைத் தனித்தனியே சந் தித்துப் பேசினர்.

ஈராக், ஈரான், லிபிய நாடு களின் தூதுவர்களே இவ்வாறு ஜனாதிபதியைச் சந்தித்தனர், என வெளிவிவகார அமைச்சு வெளி யிட்ட அறிக்கை தெரிவிக் கிறது.


பதில் வெளிவிவகார அமைச் சர் திரு. டிரோன் பெர் னண்டோவும் இச்சந்திப்பின் போது உடனிருந்தார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இஸ்ரவேல் நலன் காப்புப் பிரிவு அமைக்கப்பட்டது இலங்கையின் உள்நாட்டு விவ காரம் என்பதை ஒப்புக் கொள்வ தாக மேற்படி மூன்று தூது வர்களும் தெரிவித்தனர்.


கடந்த வாரம் ஈடுப்பிய தூது வரும், பலஸ்தீன விடுதலை இயக் கப் பிரதிநிதியும், ஜனாதிபதியைச் சந்தித்து மேற்கண்டவாறு கருத்து தெரிவித்திருந்தனர்.

பலஸ்தீனம் சம்பந்தமான அர சாங்கத்தின் கொள்கையில் மாற் றம் எதுவும் இல்லை என்று ஜனாதி பதி, அவர்களுக்கு உறுதி அளித் தார் என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(க)



பஞ்சாப் மாநிலத்தில் அமிர் தசரஸ் புனித பொற்கோயிலில் ஆயுதங்களுடன் புகலிடமடைந் திருந்த சீக்கிய தீவிரவாதிகளை கடந்த புதன்கிழமை இராணு வத்தினர் தாக்கி முறியடித்தனர்- இந்தச் சம்பவத்தின் பின்னர் பொற் கோயிலைப் பார்வையிடு வதற்காக சீக்கியரான இந்திய ஜனாதிபதி ஜெயில் சிங் அங்கு சென்றிருந்தபோது எடுத்தபடம்.



ஏற்றுமதியாளர் கருத்தரங் தோன்று பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். வர்த்தக, கப்பல் துறை அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறி, மேற்படி அமைச்சின் செயலாளர் திரு. லக்ஷ்மன் டி மெல் ஆகியோரு டன் அமைச்சர் லலித் அமர்ந்தி ருப்பதை மேலே உள்ள படத்தி லும் —

கருத்தரங்கில் பங்கு கொண்ட வர்களை கீழேயுள்ள படத்திலும் காண்க. C (எ*ச)

## பிரதேச சபை தலைவர்

அடம்பன் உதவி அர சாங்க அதிபர் பிரிவு பிர, தேச சபைத் தலைவராக இலுப்பைக் கடவை கிரா மோதய சபைத் தலைவர் திரு. வி. பிறைசூடி தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இலுப்பைக் கடவை மகா வித்தியாலயத்தின் அதிபராக இவர் கடமையாற்றுகின்றார். இவர் ஒரு சிறந்த சமூக சேவை யாளர் என்பது குறிப்பிடத்தக் கது. (எ-251)

### பொற்கோயில் தாக்குதல் எதிர்ப்பு:

# ஆயிரம் சீக்கிய துருப்புகள் கிளர்ச்சி

புதுடில்லி, ஜூன் 13

அமிர்தசரஸ் புனித பொற்கோயிலை இராணு வத்தினர் தாக்கிய சம்ப வத்தை எதிர்த்து இது வரை சுமார் ஆயிரம் சீக் கிய இராணுவ வீரர்கள் இந்தியாவில் வெவ்வேறு பகுதிகளில் கிளர்ச்சி செய் திருக்கிறார்கள்.

அரசாங்க வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன. எனினும் இந்த எண்ணிக்கையை இந்திய அரசு நேரடியாக ஏற்றுக் கொள்ளவோ மறுக்கவோ இல்லை.

எனினும் பல படைத்தளங்க ளில் நடந்த சீக் கிய துருப்புக்களின் கிளர்ச்சி இப்போது முடி வடைந்து விட்டது என்று புதுடில்லியில் அரசாங்கப் பேச் சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இறுதியாக குஜராத்தில் சீக்கிய இராணுவ வீரர்கள் கிளர்ச்சி செய்தனர். அவர்களை பாதுகாப்புப் படையினர் அடக் கினர். அப்போது 13 சீக்கிய இராணுவ வீரர்கள் மாண்ட னர். இன்னும் 33 பேர் காய முற்றனர்.

திங்கள் இரவு உத்தர பிரதேசத் தில் அக்ராவில் இராணுவ கிளர்ச்சியாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் இன் னும் 33 இராணுவ கிளர்ச்சி யாளர்கள் சரணடைந்தனர்.

பொற்கோயில் சம்பவத்தின் பின் நிகழ்ந்த மோதல்களில் இதுவரை சுமார் 120 பேர் மாண்டிருக்கின்றனர். (ப)

# வாசுதேவ போன்று விஜேவீராவும் சரணடைய வேண்டும்

### மல்லிமாராச்சி வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 14

வாசுதேவ நாணயக் காரவின் உதாரணத் தைப் பின்பற்றி ரோஹன விஜேவிரவும் சரணடைய வேண்டும்.

கொழும்பு மாவட்ட அமைச் சர் திரு. வீரசிங்க மல்லி மாராச்சி இவ்வாறு கூறினார்.

கொழும்பு மாவட்ட அபி விருத்திச் சபைக் கூட்டத்தின் போது ஜே. வீ. பி. (மக்கள் விடுதலை முன்னணி) அங்கத்த வரின் கோரிக்கை ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இவ்வாறு வேண்டுகோள் விடுத் தார்.

எவ்வித பயமுமின்றி திரு. ரோஹண விஜேவீர சரணடைய லாம். அவரின் பாதுகாப்புக்கு நான் உத்தரவாதம் தருகிறேன்.

இவ்வாறு மாவட்ட அமைச் சர் மேலும் தெரிவித்தார்.

(எ-8)

## குளியாப்பிட்டி: பள்ளிவாசல் திறப்பு

கொழும்பு, ஜூன் 14

குளியாப்பிட்டி, எதுங் கஹ கொட்டுவையில், ஜும்ஆப் பள்ளிவாசல் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

சமூக சேவையாளர் ஜனாப் அகமத் விதானே இதனைத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து ஜனாப் எம். ஐ. எம். அப்துல்லா தலை மையில் கூட்டம் நடைபெற் றது.

கல்முனை ஆஸ்பத்திரி வைத்திய ஆலோசகர் ஜனாப் எம். ஹப் ரத், வங்கி முகாமையாளர் ஜனாப் எஸ். சுபைதீன், ஜனாப் எம். எல். எம். சலீம், மௌலவி கமால்தீன், எஸ். மௌலானா (அதிபர்) ஆகியோர் உரை யாற்றினர்.

அன்றைய தினம் வெள்ளிக் கிழமை ஜும்ஆத் தொழுகையின் குத்பாப் பிரசங்கத்தை மௌலவி ஐ. எல். ஸாஹித் (ஹாஸிமிய்யா) நிகழ்த்தினார்.

(எ-8)

# சேற்றில் சிக்கிய யானை மீட்பு

### 3 நாள் அவஸ்தையின் பின் இறந்தது

கொழும்பு, ஜூன் 14

சேற்றில் சிக்கிய பெண் யானையை மகாவலி அபிவி ருத்தி சபையினரும், வன பரிபாலன பகுதியினரும் மீட்டனர். ஆனால் நான்கு நாட்களாக சேற்றில் சிக் குண்டிருந்த அந்த யானை இறுதியில் இறந்து விட் டது.

பொலன்னறுவை மாவட் டத்தில் மன்னம்பிட்டியவுக்கரு கில் யன்குரே காட்டுப் பகுதியில் இந்தப் பெண் யானை குழியில் விழுந்து சேற்றில் சிக்குண்டிருந் தது.

இப் பெண் யானையை மீட்ப தற்கு, சுமார் 15 காட்டு யானை கள் முயற்சி செய்தும் மீட்க முடியாமல் போய் விட்டது.

இதனை அறிந்த பொலன்ன றுவை மாவட்ட வன விலங்கு கள் பாதுகாப்பு அதிகாரி திரு. எம். ஜே. பி. ரூபசிங்க, தனது உதவியாளர்களுடன் சென்று மேற்படி யானையை மீட்கும் நட வடிக்கைகளை மேற்கொண் டார்.

மகாவலி அபிவிருத்தி சபை க்கு அறிவிக்கப்பட்டு புல்டோ சர் இயந்திரங்களின் மூலம் சுமார் 10 மணி நேரமாக குழி யில் இருந்து மண் அகற்றப் பட்ட போதும், யானையின் பின் கால்களை எடுக்க முடியாமல் இருந்தது.

வன விலங்கு பாதுகாப்பு ஊழியர்கள் குழியில் இறங்கி பின்கால்களை மூடியிருந்த மண்ணை அகற்றிய போது, யானை யின் பின் கால்கள் பெரிய மர வேர் ஒன்றில் சிக்கியிருந்தது தெரியவந்தது.

மரத்தின் வேர்களை வெட்டிய பின் புல்டோசர் இயந்திரத்தின் மூலம் யானை மீட்கப்பட்டது.

அப்போது சுமார் 15 காட்டு யானைகள் அருகில் இருந்து ஆர்ப்பாட்டம் செய்து கொண் டிருந்தன.

மூன்றுநாள் போராட்டத் தின் பின் மீட்டு எடுக்கப்பட்ட இந்த யானை நான்காவது தினத் தில் இறந்து விட்டது. (ப-ய)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம் 1984 ஜூன் 12இல்.

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 2516.25 | ரூ. | 2517.75 |

வர்த்தக வங்கிகள் வழங்கும் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்று விகிதம் — 1984 ஜூன் 12இல்.

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 2515.55 | ரூ. | 2518.40 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ. | 3491.02 | ரூ. | 3498.10 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | ரூ. | 923.10 | ரூ. | 930.68 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ. | 299.38 | ரூ. | 303.36 |
| 100 ஜப்பானிய யென் | ரூ. | 10.6950 | ரூ. | 10.8899 |

பாவனையாளர்களுடன் வர்த்தக வங்கிகள் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்றத்தைக் கடைப்பிடிக்க மத்திய வங்கி வழங்கும் விகிதம்

| | | ஆகக் குறைந்த வாங்கும் விகிதம் | | ஆகக் கூடிய விற்கும் விகிதம் |
|---|---|---|---|---|
| 100 வங்காளதேச டகாஸ் | ரூ. | 99.68 | ரூ. | 100.08 |
| 100 பர்மா கியாட்ஸ் | ரூ. | 309.82 | ரூ. | 311.04 |
| 100 ஈரான் ரியால் | ரூ. | 28.56 | ரூ. | 28.68 |
| 100 இந்திய ரூபா | ரூ. | 228.62 | ரூ. | 229.58 |
| 100 நேபாள ரூபாய் | ரூ. | 156.02 | ரூ. | 182 27 |
| 100 பாகிஸ்தான் ரூபாய் | ரூ. | 181.51 | ரூ. | 182.27 |

தினபதியிலும், சிந்தாமணியிலும் (மூலம் குறிப்பிடாது) பிரசுரிக்கப்படும் வெளிநாட்டுச் செய்திகள் அனைத்தும் பி. பி. சி., அ. இ. வா., டி. பி. ஏ. என். எஸ். வெ தா.நி. ஆகியவற்றிலிருந்து கிடைப்பன வாகும்.

இப்பத்திரிகையை அச்சிட்டுவெளியிட்டவர் சுயாதீனப் பத் திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு — 12, (இலங்கை) தபால்பெட்டி 1613. வெளியிட்ட திகதி 14 ஜூன் 1984

Dinapathi, 5, Gunasena Mawatha, Colombo 12 P. O. Box 1613.